# பிரார்த்தனை மடல்

1. **திருப்பரங்கிரிதனில் உறை சரவணப்பெருமாளே**

   மலைபோலே கனைத்தெழும் பகடது பிடர்மிசைவரு, கறுத்த வெஞ்சின மறலிதன் உழையினர், கதித்து அடர்ந்து எறிகயிறு அடுகதைகொடு பொருபோதே, கலக்குறும் செயல் ஒழிவற, அழிவுறு கருத்து நைந்து அலமுறு பொழுது, அளவை கொள் கணத்தில் என்பயமற, மயில் முதுகினில் வருவாயே.

2. **வளமொன்று பரங்கிரி வந்தருள் பெருமாளே**

   பலதுன்பம் உழன்று கலங்கிய சிறியன், புலையன், கொலையன்புரி பவம் இன்று கழிந்திட வந்து அருள்புரிவாயே.

3. **தென்பரங்குன்றுறை பெருமாளே**

   வாசமிகுந்த கடம்ப மென் கிண்கிணி மாலை கரங்கொளும் அன்பர் வந்து, அன்பொடு வாழ நிதம் புனையும் பதம் தந்து, உனதருள் தாராய்.

4. **தென்பரம் பொருப்பில் தங்கும் பெருமாளே**

   தளர்ச்சிப் பம்பரந்தனை, ஊசல் சடத்தை, துஞ்சிடும் கலத்தை, பஞ்ச இந்திரிய வாழ்வை, கணத்தில் சென்று இடம் திருத்தி, தண்டையங் கழற்குத் தொண்டு கொண்டு அருள்வாயே.

5. **தென்பரங்குன்றிலுறை பெருமாளே,**

   அடியேனை, சிலம்பும், கனக தண்டையும், கிண்கிணியும், ஒண்கடம்பும் புனையும் உன் அடிசேராய்.

6. **திருப்பரங் குன்ற மேவு பெருமாளே**

   எரிபடும் பஞ்சு போல, மிகக்கெடுந் தொண்டனேனும் இனல்படும் தொந்தவாரி கரையேற, இசைத்திடும் சந்தபேதம் ஒலித்திடும் (உன்) இணைப்பதம் புண்டரீகம் அருள்வாயே.

7. **கொண்ட நடனம் பதம் செந்திலிலும் எந்தன் முன்**
   **கொஞ்சி நடனம் கொளும் கந்தவேளே**

   தண்டையணி வெண்டையம், கிண்கிணிசதங்கையும், தண்கழல் சிலம்புடன் கொஞ்சவே, நின் தந்தையினை

முன்பரிந்து, இன் பவுரி கொண்டு, சந்தோஷம் அணைந்து நின்ற அன்பு போலக் கண்டுஉற, கடம்புடன், சந்த மகுடங்களும், கஞ்சமலர் செங்கையும், சிந்து வேலும், கண்களும், முகங்களும், சந்திர நிறங்களும், கண்குளிர என்றன்முன் சந்தியாவோ.

8. செந்தில் குமரப் பெருமாளே

சந்தப்படிஉற என்தன் தலையில் சந்தப் பதம் வைத்து அருள்வாயே

9. மங்கல மகிமை மாநகர் செந்திலில் வந்துறை பெருமாளே

உளம் தெளிந்து, அன்பொடு, சிவயோகத்து உருகும், ஞான பரம்பர தந்திர அறிவினோர் கருதும், அம்கொள் சிலம்பணி உபய சீதள பங்கய மென்கழல் தருவாயே.

10. திருச்செந்தூர்தனில் மேவிய தேவர்கள் பெருமாளே

அருக்கன் போல் ஒளிவீசிய, மாமுடி அனைத்தும் அழகாய் நலமே தர, அருட்கண் பார்வையினால் அடியார்தமை மகிழ்வோடே அழைத்து, சேதிகள் பேசிய காரண, வடிப்பந்தான் எனவே எனை நாள் தொறும் அதிக்கம் சேர்தரவே அருளால் உடன் இனிது ஆள்வாய்

11. திருச்செந்தூர் நகரிக்குள் விளங்கிய பெருமாளே

உலப்பின்றி ஆறு எனும் அக்ஷரமும், கமழ் கடப்பந்தாரும், முகப்ரபையும், தினம் உளத்தின் பார்வையிடத்தில் நினைந்திட அருள்வாயே.

12. செந்திலில் தங்கும் பெருமாளே

இசைக்கும் செந்தமிழ் கொண்டு, அங்கு இரக்கும் புன்தொழில் பங்கம் கெட துன்பம் கழித்து இன்பம் தருவாயே.

13. செந்தில் வாழ் செந்தமிழ் பெருமாளே

துன்ப நோய் சிந்த, நற்கந்தவேள் என்று, உனைத் தொண்டினால் ஒன்று உரைக்க அருள்வாயே.

14. சந்ததி ஜகம் தொழும் சரவணப் பெருமாளே

அந்தகன் வரும் தினம் பிறகிட, சந்ததமும் வந்து கண்டு அரிவையர்க்கு அன்புருகு சங்கதம் தவிர, முக்குணம் மாள, அந்தி பகல் என்ற இரண்டையும் ஒழித்து இந்த்ரிய சஞ்சலங்களை அறுத்து, அம்புய பதங்களின்

பெருமையைக் கவிபாடிச் செந்திலை உணர்ந்து உணர்ந்து உணர்வுறக் கந்தனை அறிந்து அறிந்து, அறிவினில் சென்று செருகும் தடம் தெளிதரத் தணியாத சிந்தையும் அவிழ்ந்து அவிழ்ந்து, உரை ஒழித்து, என்செயல் அழிந்து அழிந்து அழிய, மெய்சிந்தை வர என்று நின் தரிசனைப் படுவேனோ.

15. **கயிலைமலையனைய செந்தில்பதி வாழ்வே!**

உயர் கருணைபுரியும் இன்பக்கடல் மூழ்கி உனை எனதுள் அறியும் அன்பைத் தருவாயே.

16. **இன்சொல் விசாகா க்ருபாகரா!**

உம்பர்கள் சுவாமி நமோ நம எம்பெருமானே நமோ நம ஒண்டொடிமோகா நமோ நம என நாளும் உன் புகழேபாடி, நான் இனி அன்புடன் ஆசார பூஜை செய்து உய்ந்திட வீணாள் படாது அருள்புரிவாயே.

17. **செந்தில் நகரிலுறை பெருமாளே**

அந்தகன் எனை அடர்ந்து வருகையினில் அஞ்சல் என, வலிய மயில் மேல் நீ அந்த மறலியொடு, உகந்த மனிதன், நமது அன்பன் என மொழிய வருவாயே.

18. **செந்திலில் வந்தருள் பெருமாளே**

துன்பம்கொண்டு அங்கம் மெலிந்து, அறநொந்து, அன்பும் பண்பும் மறந்து, ஒளிதுஞ்சும் பெண் சஞ்சலம் என்பதில் அணுகாதே, இன்பம் தந்து, உம்பர் தொழும் பதகஞ்சம் நம் தஞ்சம் எனும்படி, என்றென்றும் தொண்டுசெயும்படி அருள்வாயே.

19. **சீரலைவாய் நகர் மேவிய கந்தப் பெருமாளே**

காரண காரிய லோக ப்ரபஞ்ச சோகம் எலாம் அற வாழ்வுற-நம்பில், காசறுவாரி மெய்ஞான தவம் சற்று அருளாதோ.

20. **ஆதியான செந்தில் வாழ்வதான பெருமாளே**

நோய் கலந்த வாழ்வுறாமல் நீ கலந்து (என்) உள் ஆகும் ஞானநூல் அடங்க ஓத வாழ்வு தருவாயே.

21. **அலைவாய்க் கரையின் மகிழ்சீர்குமர, அடியார்க்கு எளிய பெருமாளே**

நிலையாப் பொருளை உடலாக் கருதி நெடுநாள் பொழுதும் அவமே போய் நிறை போய், செவிடு குருடாய்,

பிணிகள் நிறைவாய், பொறிகள் தடுமாறி மலம், நீர், சயனமிசையாய்ப் பெருகி மடிவேற்கு, உரியநெறியாக, மறை போற்றரிய ஒளியாய் பரவும் மலர்தாட்கமலம் அருள்வாயே.

22. வாரிதி நீர் பரந்த சீரலைவாயுகந்த பெருமாளே

காரண காரியங்கள் ஆனதெல்லாம் ஒழிந்து, ''யான்'' எனும் மேதை விண்டு, பாவகமாயிருந்து, கால் உடலூடு இயங்கி, நாசியின் மீது இரண்டு விழிபாய, காயமும், நாவும், நெஞ்சும் ஓர் வழியாக, அன்பு காயம் விடாமல், உன்றன் நீடியதாள் நினைந்து, காணுதல் கூர்தவம் செய் யோகிகளாய் விளங்க அருள்வாயே.

23. மகாபுனிதம் தங்கும் செந்திலில் வாழ் உயர் பெருமாளே

தஞ்சம் தஞ்சம் சிறியேன் மதி கொஞ்சம் கொஞ்சம் துரையே, அருள் தந்து, என்று இன்பந்தரு வீடது தருவாயே.

24. ஆவினன்குடி மீதிலங்கிய பெருமாளே

(அடியேன்) வீறுகொண்டு உடனே வருந்தியுமே உலைந்து, அவமே திரிந்து, உளமே கவன்று, அறிவே கலங்கிட, வெகுதூரம் போய் அலைந்து உழலாகி, நொந்து, பின் வாடி நைந்து, எனது ஆவி வெம்பியே, பூதலந்தனிலே மயங்கிய மதிபோக, போது கங்கையின் நீர் சொரிந்து, இருபாத பங்கயமே வணங்கி, பூஜையும் சிலவே புரிந்திட அருள்வாயே.

25. ஆவினன்குடி வெற்பினில் நிற்கும் பெருமாளே

உனது பாதபங்கயம் முற்றிட உட்கொண்டு, ஓதுகின்ற திருப்புகழ் நித்தம் பாட அன்பது தருவாயே.

26. திருவாவினன்குடி வரு பெருமாளே

நின்செயலே விரும்பி உள்ளம் நினையாமல், அவமாயை கொண்டு, உலகில் விருதா அலைந்து உழலும் அடியேனை அஞ்சல் என வரவேணும். அறிவு ஆகமும் பெருக இடர் ஆனதும் தொலைய அருள் ஞான இன்பமது புரிவாயே.

27. சிவமலை மருவிய பெருமாளே

*தழைந்த சிவசுடர்தனை என் மனதினில் அழுந்த உரைசெயவரு முகநகையொளி தழைந்த நயனமும் இருமலர் சரணமும் மறவேனே.*

28. சிவகிரி மருவிய பெருமாளே

*என்றென்றும் கன்றும் துன்பும் கொண்டு உன் திருமலரடி பரவிட மனதினில் நன்றென்றும் கொண்டு என்றும் சென்றும் தொழும் மகிமையின் நிலை உணர்வினில் அருள்பெற, இன்பும், பண்பும், தெம்பும், சம்பந்தமும் மிக அருள்பெற, அருள்வாயே.*

29. பழநிவேல இமையவர்கள் பெருமாளே

*சீறல் அசடன், வினைகாரன், முறைமையிலி தீமைபுரி கபடி, பவநோயேதேடு பரிசி, கனநீதி, நெறி முறைமை, சீர்மை சிறிதுமிலி, எவரோடும் கூறு மொழியது பொய்யான கொடுமையுள கோளன், அறிவிலி, உன் அடிபேணாக் கூளன் - எனினும், எனை நீ உன் அடியாரோடு கூடும் வகைமை அருள் புரிவாயே.*

30. பழநி வேலாயுத அமரர் பெருமாளே

*ஆமுனது நேய அடியாரொடு கூடுகிலன், நீறு நுதல் மீது இடல் இலா மூடன், ஏதுமிலி, ஆயினும் யான் அடிமை ஈடேறவே கழல்கள் தருவாயே.*

31. பழைய பழநி அமர்வோனே

*செறிவும், அறிவும், உறவும் அனைய திகழும் அடிகள் தர வேணும் கமல விமல மரகதமணி கனக மருவும் இரு பாதம் கருத அருளி, எனது தனிமை கழிய அறிவு தர வேணும்.*

32. பழநி விரவும் அமரர் பெருமாளே

*திமிர உததி யனைய நரக ஜெனனம் அதனில் விடுவாயேல், செவிடு, குருடு, வடிவு குறைவு, சிறிது மிடியும் அணுகாதே, அமரர் வடிவும், அதிக குலமும், அறிவு நிறையும் வரவே, நின் அருளது அருளி, எனையும் மனதோடு அடிமை கொள்ளவும் வர வேணும்.*

33. பழநி மலைதனில் இனிதுறை அமரர்கள் பெருமாளே

*(அடியேன்) இடர்படு துயர் தீர, அகர முதல் உள பொருளை அருளிட, இருகை குவி செய்து, உள் உருகிட, உருகியே ஹரஹர என, வலன் இடம் உறு எழில் உனது இருபாதம் அருள, அருளுடன் மருள் அற, இருள் அற, கிரண அயில்கொடு, குருகு அணி கொடியொடு, அழகுபெற, மரகத மயில் மிசை வர, இசைவாயே!*

34. பழநி மலை வாழ வந்த பெருமாளே

*உலக பசு பாச தொந்த மதுவான உறவு, கிளை, தாயர், தந்தை, மனை, பாலர், மல, ஜல, சுவாச, சஞ்சல மதால் என் மதி நிலை கெடாமல் உன்றன் அருள் தாராய்.*

35. பழநி மலை நாத, கந்தப் பெருமாளே

*யானும், இங்கு உன் அடியார் போல் அருமறைகளே நினைந்து, மநு நெறியிலே நடந்து, அறிவை அறிவால் அறிந்து, நிறைவாகி, அகில புவனாதி யெங்கும் வெளியுற, மெய்ஞான இன்ப அமுதை ஒழியாது அருந்த அருள்வாயே.*

36. பழநிமலை தனில் அமர்ந்த பெருமாளே

*(எனது) இருள் அகல உனது தண்டையணி பாதம், எனது தலைமிசை அணிந்து, அழுது அழுது உனது அருள் விரும்பி (உனது) இனிய (திருப்) புகழ் விளம்ப அருள் தாராய்.*

37. குருகுமர பழநிவளர் வெற்புத் தனில் திகழும் பெருமாளே

*(அடியேனை) மறை முறையின் இறுதி நிலை முத்திக்கு இசைத்தபடி, உடல், உயிர்கள், கரணம் வெளிப்பட்டுக் குணத் திரயம் வழிபடவும், நினதடிமையை இச்சைப்படுத்தி, வரு துரக மயில், மணிகள் சப்திக்க நிர்த்தமிட, ஒருபதுடன் இரு புயமும், மட்டுத் தொடைக்கு இசைய, மன மகிழ இனிய மொழி செப்பிச் சிவத்த பதம் அருள்வாயே.*

38. பழநிமலை மேல் நின்ற சுப்ரமண்யா அமரர் பெருமாளே

*துரிய நிலையே கண்ட முக்தர், இதய கமலமதனில் விளையா நின்ற அற்புத சுபோத சுக, சுய ஸ்படிக மா இன்ப*

பத்ம பதமே அடைய உணராதே, கருவிலுருவே தங்கு, சுக்கில நிதான வளி பொரும அதிலே கொண்ட முக்குண விபாக நிலை, கருத அரியா வஞ்சகக் கபடம் மூடி, உடல் வினைதானே கலகமிடவே, பொங்கு குப்பை மல வாழ்வு, நிஜமென உழலும், மாயம் செனித்த குகையே உறுதி கருதும் அசுழமாம் இந்த மட்டைதனை ஆள உனது அருள் தாராய்.

39. பழநி வரு கற்பூர கோலாகலா அமரர் பெருமாளே

உலைவற விருப்பாக, நீள்காவின் வாசமலர், வகை வகை எடுத்தே, தொடா மாலிகாபரணம், உனது அடியினில் சூடவே, நாடும் மாதவர்கள் இரு பாதம் உளமது தரித்து, வினாவோடு பாடி, அருள் வழிபட எனக்கே தயாவோடு தாளுதவ, உரக மது எடுத்தாடும் மேகார மீதின் மிசை வரவேணும்.

40. பதிக் கொள் ஆறிருபுய பழநியிலுறை பெருமாளே

அருத்தி வாழ்வொடு, தனகிய மனைவியும் உறவோரும், அடுத்த பேர்களும், இதமுறு மகவொடு, வள நாடும், தரித்த ஊரும், மெய்யென மன நினைவது, நினையாது உந்தனைப் பராவியும் வழிபடு தொழிலது தருவாயே.

41. பழநி வாழ் குமரனே

ஏறு மயில் வாகனா, குகா, சரவணா எனது ஈசா என மானம் உனது என்று ஓதும் ஏழைகள் வியாகுலம் இது ஏதென வினாவில், உனை ஏவர் புகழ்வார், மறையும் என் சொலாதோ.

42. புத்தேளிர்கள் பெருமாளே

முதிய புராரிக்கு ஓதிய குருவே, என்று உருகியும் ஆடிப் பாடியும், இரு கழல் நாடிச் சூடியும் உணர்வினோடு ஊடிக் கூடியும் வழிபாடுற்று உலகினொர் ஆசைப் பாடற நிலைபெறு ஞானத்தால் இனி உனதடியாரைச் சேர்வதும் ஒரு நாளே.

43. உம்பர்கள் தம்பிரானே

தட்டுப்படுங் கொடும் பங்க வாழ்வும் தொலைவில் பிறவியுமகல, ஒரு மவுன, பரம சுக சுத்தப் பெரும் பதம் சித்திக்க அன்புடன் சிந்தியாதோ.

44. செகத்தில் ஜோதிப் பெருமாளே

*கருப்பற்று ஊறிப் பிறவாதே, கனக்கப் பாடுற்று உழலாதே திருப்பொற் பாதத்து அநுபூதி சிறக்கப் பாலித்து அருள்வாயே.*

45. சடையாளர் விரும்பிய குருநாதா

*புன்மை விரும்பியே தடுமாறும் என்னை விரும்பி நீ, ஒரு கால் நின்னை எண்ணி விரும்பவும் அருள்வாயே.*

46. *அநுராகத் திடை முழுகி எனது மனதழியும் நாட்களிலும், இரு சரண இயலும், வினை எறியும் வேற்கரமும் எழுதரிய அறுமுகமும், அருளும் ஏத்தும் வகை தரவேணும்.*

47. *அவன் இவன் உவனுடன், அவள் இவள் உவளது, அது இது உது எனு மாறற்று, அரு உரு ஒழிதரு உருவுடையது பதி, தமியனும் உணர்வேனோ.*

48. *இகல் வெற்றிச் சத்திக் கிரணமும் முரணிர்த்தப் பச்சைப் புரவியும் இரவிக் கைக்குடத் துவஜமும் மறமாதும், இடை வைத்துச் சந்தத்தமிழ் கொடு கவி மெத்தச் செப்பிப் பழுதற, எழுதி, கற்பித்துத் திரிபவர்-பெருவாழ்வே.*

49. பழநி மலைக்குள் மேவிய பெருமாளே

*கவலை மனத்தன் ஆகிலும் உனது பிரசித்த மாகிய, கனதன மொத்த மேனியும், முகம் ஆறும், அதி பல வஜ்ர வாகுவும், அயில் நுனை வெற்றி வேலதும், அரவு பிடித்த தோகையும், உலகேழும் அதிர அரற்று கோழியும், அடியவர் வழுத்தி வாழ்வுறும், அபிநவ பத்ம பாதமும், மறவேனே.*

50. பழநி மருவிய பெருமாளே

*மனது துயரற, வினைகள் சிதறிட, மதன பிணியொடு கலைகள் சிதறிட, மனது பதமுற, எனது தலை பதம் அருள்வாயே.*

51. பழநி மலைப் பெருமாளே

*திடமிலி, சற்குணமிலி, நற்றிற மிலி, அற்புதமான செயலிலி, மெய்த் தவமிலி, நற் செபமிலி, சொர்க்கமு மீதே இடமிலி, கைக் கொடையிலி, சொற்கு*

இயல்பிலி, இரு வினையற்று, இயல்கதியைப் பெற வேணும்.

52. பழநிப் பதி செழிக்க மேவிய பெருமாளே

உச்சித மெய்ப்புற, அனைத் தயாவுடன் மெய்ப்படு பக்தியின் இணக்கமே பெற, உளம் குளிர் புத்தியை எனக்கு நீ தர வருவாயே.

53. திருப்பழநி வாழ வந்த பெருமாளே

வெகுட்சி தனையே துரந்து களிப்பினுடனே நடந்து மிகுக்கும் உனையே வணங்க வரவேணும்.

54. பிரகாசம் பழநாபுரி மேவிய பெருமாளே

(அடியேன்) ஞான சதாசிவ மதின் மேவி, பாடும் தொனி நாதமும், நூபுரமாடும் கழல் ஓசையிலே, பரிவாகும்படி அடியேனையும் அருள்வாயே.

55. பழநி மலை வீற்றருளும் வேலா

இசை பயில் ஷடாக்ஷரமதாலே இகபர செளபாக்யம் அருள்வாயே.

56. 'தனி ஏரகத்தின்'முருகோனே

செக மாயை உற்று, என் அக வாழ்வில் வைத்த, திருமாது கெர்ப்பம் உடல் ஊறி, தெச மாத முற்றி, வடிவாய் நிலத்தில், திரமாய் அளித்த பொருளாகி, மக அவாவின், உச்சி, விழி, ஆனனத்தில், மலைநேர் புயத்தில் உறவாடி, (உன்னை) மடி மீது அடுத்து, விளையாடி, நித்தம் மணிவாயின் முத்தி தர வேணும்.

57. திருவேரகத்தில் உறைவா

(என்) பிழையே பொறுத்து, உன் இருதாளில் உற்ற பெருவாழ்வு பற்ற அருள்வாயே.

58. சுவாமி மலை வாழும் பெருமாளே

'சிவாய' எனும் நாமம் ஒரு காலும் நினையாத திமிராகரனை 'வா' என்று அருள்வாயே திரோத மலமாறும் அடியார்கள் அருமாதவர், தியான முறு பாதம் தருவாயே.

59. குருமலை மருவிய பெருமாளே

இந்தச் சடமுடன் உயிர் நிலை பெற நளினம் பொற் கழலிணைகளில் மரு மலர் கொடு, என் சித்தமும், மனமும் உருகி, நல் சுருதியின் முறையோடே, சந்தித்து, 'ஹர ஹர,

சிவ சிவ' சரணம் என, கும்பிட்டு (உன்) இணையடி அவை என் தலைமிசை தங்கப் புளகிதமெழ, இரு விழி புனல் குதி பாயச் சம்பைக் கொடியிடை விபுதையின் அழகு முனந்தத்திரு நடமிடு சரண் அழகுற, சந்தச் சபைதனில் எனதுளம் உருகவும் வருவாயே.

60. குருமலையின் மருவு குருநாதா

எனைக் கருதி ஒரு பரம்பொருள் ஈதென்று, என் செவியிணையில் அருளி, உருவாகி வந்த என் கருவினையோடு அருமலமும் நீறுகண்டு, தண்தருமாமென் கருணைபொழி கமலமுகம் ஆறும், இந்துளந் தொடை மகுட முடியும், ஒளிர் நூபுரஞ் சரண் கலகலென மயிலின்மிசை ஏறி வந்து உகந்து எனை ஆள்வாய்.

61. குருமலை விளங்கு ஞான சற்குருநாதா

கறைபடும் உடம்பு இராது எனக் கருதுதல் ஒழிந்து, வாயுவைக் கர்ம வசனங்களால் மறித்து, அனலூதிக் கவலைப்படுகின்ற யோக கற்பனை மருவு சிந்தை போய்விட, கலகமிடும் அஞ்சும் வேரற, செயல்மாள, குறைவற நிறைந்த மோன நிற்குணமது பொருந்தி, வீடுற, குருமலை விளங்கு ஞான சற்குருநாதா, குமரா சரண் என்று, கூதளப் புதுமலர் சொரிந்து, கோமளப் பதயுகளப் புண்டரீக முற்று, உணர்வேனோ.

62. கேசவன் பரவு குருமலையில் யோகத்தமர்ந்த பெருமாளே

நாசர் தம் கடையதனில் விரவி, நான் மெத்த நொந்து, தடுமாறி, ஞானமும் கெட, அடைய வழுவி ஆழத்தழுந்தி மெலியாதே மா ஜெகம் தொழும் உனது புகழின் ஓர் சொற் பகர்ந்து சுகமேவி, மாமணம் கமழும் இரு கமலபாதத்தை நின்று பணிவேனோ.

63. சுவாமிமலை தனில் உறைவோனே

காலன் எனை அணுகாமல் உனது

இரு காலில் வழிபட அருள்வாயே.

64. சுவாமி வெற்பில் உறைவோனே

(என்) வாசமுற்ற தலையெலாம் வெளுத்து, இளமை போய் ஒளித்து விடுமாறு, இடைவிடாது, எடுத்த பிறவி வேரறுத்து, உன் இனியதாள் அளிப்பது ஒரு நாளே.

65. சுவாமி மலை யமர்ந்த பெருமாளே

*பரம ஞான ஒளி சிறந்து, முகம் ஓராறும் மிக விரும்பி, அயராதே அறுகு தாளி நறையவிழ்ந்த குவளை, வாசமலர் கரந்தை, அடைய வாரிமிசை பொழிந்து உன் அடிபேணி அவசமாகி உருகும் தொண்டருடனதாகி விளையும் அன்பின் அடிமையாகும் முறைமை ஒன்றை அருள்வாயே.*

66. பல குன்றிலும் அமர்ந்த பெருமாளே

*அதிரும் கழல் பணிந்து உன் அடியேன் உன் அபயம் புகுவது என்று நிலைகாண இதயந் தனில் இருந்து க்ருபையாகி இடர்சங்கைகள் கலங்க அருள்வாயே.*

67. வடிவதாம் மலை யாவையும் மேவிய பெருமாளே

*பறவையான மெய்ஞ்ஞானிகள், மோனிகள், அணுகொணா வகை நீடும் இராசிய பவன பூரக வேகிகமாகிய விந்து நாதம் பக ரொணாதது, சேர வொணாதது, நினையொணாதது, வான, தயாபர பதியதான சமாதி மனோலயம் வந்து தாராய்.*

68. குன்று தோறாடல் மேவு பெருமாளே

*(உனது) செஞ்சரண், நாத ,கீத கிண்கிணி, நீபமாலை, திண்திறல் வேல், மயூரம், முகம் ஆறும், செந்தமிழ் நாளும் ஓதி உய்ந்திட, ஞானம் ஊறு செங்கனி வாயில் ஓர் சொல் அருள்வாயே.*

69. திருக் கயிலைப் பெருமாளே

*தேனுந்து முக்கனிகள், பால், செங்கரும்பு, இளநீர், சீரும் பழித்த சிவம் அருள் ஊற, தீதும் பிடித்த வினை ஏதும் பொடித்து விழ, ஜீவன் சிவச் சொரூபம் எனத் தேறி, நான் என்பது அற்று, உயிரோடு ஊன் என்பது அற்று, வெளி நாதம் பரப் பிரும்ம ஒளி மீதே, ஞானம் சுரப்ப, மகிழ் ஆனந்த சித்தி யோடே, நாளும் களிக்க பதம் அருள் வாயே.*

70. மலைச் சிகர வடமலை நின்ற பெருமாளே

*கறுத்த தலை வெளிறு மிகுந்து, மதர்த்த இணை விழிகள் குழிந்து, கதுப்பிலுறு தசைகள் வறண்டு, செவி தோலாய்க் கழுத்தடியும் அடைய வளைந்து, கனத்த நெடு முதுகு குனிந்து, கதுப்புறு பல் அடைய விழுந்து, உதடு நீர் சோர,*

உறக்கம் வரும் அளவில் எலும்பு குலுக்கி விடும் இருமல் தொடங்கி, உரத்த கன குரலும் நெரிந்து, தடி காலாய், உரத்த நடை தளரும், உடம்பு பழுத்திடு முன், மிகவும் விரும்பி உனக்கு அடிமைப்படுமவர் தொண்டு புரிவேனோ.

71. வடமலையில் உலவிய வடிவேலா

கடல் உலகினில் வரும் உயிர்படும் அவதிகள், கலகம் இனையதுள கழியவும், நிலைபெற கதியும், உனது திருவடி நிழல் தருவதும் ஒரு நாளே.

72. திருவேங்கட மாமலை மேவிய பெருமாளே

எனதாந் தனதானவை போய் அற, மலமாம் கடு மோக விகாரமும், இவை நீங்கிடவே, இரு தாளினை அருள்வாயே.

73. திருத்தணி மேவும் பெருமாளே

உனைப் பல நாளும் திருப்புகழாலும் உரைத்திடுவார் தங்குளிமேவி உணர்த்திய போதந்தனைப் பிரியாது, ஒண் பொலச் சரண் நானும் தொழுவேனோ.

74. தணிமலை மேவு பெருமாளே

நோய்கள் பிறவிகள் தோறும் எனை நலியாதபடி, உனது தாள்கள் அருள்வாயே.

75. திருத்தணி யிருக்கும் பெருமாளே

நினைத்ததும் அளிக்கும், மனத்தையும் உருக்கும், நிசிக்கரு அறுக்கும் பிறவாமல், நெருப்பையும் எரிக்கும், பொருப்பையும் இடிக்கும், நிறைப் புகழ் உரைக்கும் செயல் தாராய்.

76. திருத்தணிப் பதி மருவிய பெருமாளே

(என்) மனத்தில் எத்தனை நினை கவடுகள், குடி கெடுத்தது எத்தனை, மிருகமதென உயிர் வதைத்தது எத்தனை, அளவிலை விதிகரம் ஒழியாமல் வகுத்தது எத்தனை, மசகனை, முருடனை, மடைக் குலத்தனை, மதியழி விரகனை, மலர் பதத்தினில் உருகவும், இனியருள் புரிவாயே.

77. திருத்தணி மாமலைப்பதி தம்பிரானே

ஏது புத்தி ஐயா எனக்கு, இனி யாரை நத்திடுவேன், அவத்தினிலே இறத்தல் கொலோ, எனக்கு நீ தந்தை

தாய் என்றே இருக்கவும், நானும் இப்படியே தவித்திடவோ, செகத்தவர் ஏசலில் படவோ, நகைத்தவர் கண்கள் காண, பாதம் வைத்திடையா.

78. திருத்தணி மலையில் நடித்தருள் பெருமாளே

மருவு புயத்திடை பணிகள் அண, பல கரி, பரி, சுற்றிட, கலைகள் தரித்து, ஒரு மதன சரக்கென, கனக பல்லக்குடன் அது தேடேன், வரிய பதத்தினின் அருவி இருப்பிடம் அமையும் எனக்கு இடம் உனது பதச் சரண், மருவு திருப்புகழ் அருள, எனக்கு இனி அருள்வாயே.

79. திருத்தணி மாமலை மேவிய பெருமாளே

தாக்கு அமருக்கு ஒரு சாரையை, வேறொரு சாட்சியறப் பசி யாறியை, நீறிடு சாஸ்திர வழிக்கு அதி தூரனை, வேர் விடு தவமூழ்கும் தாற்பர்யம் அற்று உழல் பாவியை, நாவலர் போல் பரிவுற்று உனையே கருதாது, இகல் சாற்று தமிழ் குரை ஞாளியை, நாள் வரை தடுமாறிப் போக்கிடம் அற்ற வ்ருதாவனை, ஞானிகள் போற்றுதல் அற்ற துரோகியை, மாமருள் பூத்த மலத்ரய பூரியை, நேரிய புலையேனை, போக்கிவிடக் கடனோ அடியாரொடு போய் பெறுகைக் கிலையோ கதியானது போர்ச் சுடர் 'வஜ்ர வை வேல் மயிலா - அருள் புரிவாயே.

80. பவ ரோக வைத்ய நாதப் பெருமாளே

நிலையாத சமுத்திரமான சம்சார துறைக்கணின் மூழ்கி, நிஜமானது எனப் பல பேசி, அதனூடே நெடு நாளும் உழைப்புளதாகி, பெரியோர்கள் இடைக் கரவாகி, நினைவால் நின் அடித்தொழில் பேணித் துதியாமல், தலையான உடற்பிணி ஊறி, பவ நோயினலைப் பல வேகி, சலமான பயித்தியமாகி, தடுமாறித் தவியாமல், பிறப்பையும் நாடி, அது வேரையறுத்து, உனை ஓதி தலமீதில் பிழைத்திடவே நின் அருள்தாராய்.

81. தணிமலைச் சிகரத்திடை உற்றருள் பெருமாளே

அசடனை, பழியுற்ற அவத்தனை, அடைவு கெட்ட புரட்டனை, முட்டனை, அடியேனை அகில சக்தியும், எட்டுறு சித்தியும், எளிதெனப் பெரு வெட்ட வெளிப்படும் அருண பொற்பதம் முற்றிட வைப்பதும் ஒரு நாளே.

82. வள்ளி மணவாளப் பெருமாளே

*இல்லும், இளையோரும் மெல்ல அயலாக, வல்லெருமை மாயச் சமனாரும், எள்ளி, எனது ஆவி கொள்ளை கொளும் நாளில் உய்ய ஒரு நீ பொற்கழல் தாராய்.*

83. திருக் கழுக்குன்றத்தில் மேவிய பெருமாளே

*இகத்தை மெய்யெனக் கொண்டு இப்புவி,பாலர், பொன், மயக்கிலுற்று, அப்பற்றை விடாது உடல் இளைப்பும் இரைப்பும், பித்தமுமாய் நரை முதிர்வாயே, எமக்கயிற்றில் சிக்கி, நில்லா முன், உன் மலர்ப் பதத்தில் பக்தி விடா மனது இருக்கும் தொண்டர்க்கு இணையாக உன் அருள்தாராய்.*

84. சிரகிரி நிற்கும் பெருமாளே

*(அடியேன்) துஷ்டன், பகிடி, மருள் கொண்டு அழியும் அவத்தன், குணவீனன், அறிவிலி, சற்றும் பொறையிலி பெற்று உண்டு, அலைதல் ஒழித்து என்று அருள்வாயே.*

85. சிராமலை தம்பிரானே

*பட்டி மாடான நான் உனை விட்டு இராமே, உலோகித பத்ம சீர்பாதம் நீ இனி வந்து தாராய்.*

86. வெற்றி வேலாயுதப் பெருமாளே

*பக்தியால் யான் உனைப் பலகாலும் பற்றியே, மா திருப்புகழ் பாடி, முக்தனாகுமாறு, எனைப் பெரு வாழ்வில் முக்தியே சேர்வதற்கு அருள்வாயே.*

87. விராலி மலையுறை பெருமாளே

*சீரான கோல கால நவமணி மாலாபி ஷேக பார வெகுவித தேவாதி தேவர் சேவை செயும் முகமலர் ஆறும், சீராடு வீரமாது மருவிய ஈராறு தோளும், நீளும் வரியளி சீராக மோதும் நீப பரிமள இரு தாளும், ஆராத காதல் வேடர் மடமகள், ஜீமூதம் ஊர் வலாரி மடமகள், ஆதார பூதமாக வலம் இடம் உறை வாழ்வும், ஆராயும் நீதி வேலும், மயிலும், மெய்ஞ்ஞானா பிராமமும் தாப வடிவமும் ஆபாதனேனும் நாளும் நினைவது பெற வேணும்.*

88. விராலி மலையுறை பெருமாளே

வேதாள ஞான ஹீனன், விதரண நாதானில்லாத பாவி, அநிஜவன், வீணாள் படாத போத தவமிலி, பசுபாச வியாபார மூடன் யானும் உனது இரு சீர்பாத தூளியாகி நரகிடை வீழாமலே சுவாமி திருவருள் புரிவாயே.

89. வேலா விராலி வாழ்வே

நாலான வேத நூல் ஆக மாதி நான் ஓதினேனுமிலை, வீணே நாள் போய் விடாமல் ஆறாறு மீதில் ஞானோபதேசம் அருள்வாயே.

90. விராலி நகரில் வளர் தம்பிரானே

காதி வரும் இயம தூதர் கயிறு கொடு காலில் இறுக எனை வந்து இழாதே, காவல் என விரைய ஓடி, உனதடிமை காண வருவது எந்த நாளோ?

91. செங்கோடமர்ந்த பெருமாளே

உரையையும், அறிவையும், உயிரையும் உணர்வையும், உன் பாத கஞ்ச மலர் மீதே, உறவோடு புனைதர நினை தரும் அடியாரோடு, ஒன்றாக என்று பெறுவேனோ.

92. திருச் செங்கோட்டுப் பெருமாளே

கஞ்சம் வாய்த்திட்டவர்க்கும், கூட்டி கன்று மேய்த்திட்டவர்க்கும், கூற்றைக் கன்ற மாய்த்திட்டவர்க்கும், தோற்றக் கிடையா நீ, கண்டு, வேட்டுப் பொருள் கொண்டாட்டத்து இன்ப வாக்யம் எனக்கும் கேட்கத்தந்து காத்துத் திருக்கண் சாத்தப் பெறுவேனோ.

93. செங்கோடை நகர் தம்பிரானே

அடியேனிடம் சாலும் வினை அஞ்சி ஓட, தார்கடம்பு, ஆடு கழல், பாத செந்தாமரைகள், தாழ் பெரும் பாதை வழியே படிந்தே, வருகு தாபம் விண்டே, அமுது வாரியுண்டே, பசிகள், தாபமுந்தீர, துகிர் போல் நிறம், காழ் கொள் உரு சாரவும், 'ஜோதி முருகா' எனுங் காதல் கொடு தானிருந்து ஓத, இரு ஓர் அகம் பேறுறுக விஞ்சை தாராய்.

94. சர்ப்ப கிரி நாத

புற்புதம் எனும் நாம அற்ப, நிலையாத, பொய்க்குடில் குலாவும் மனையாளும், புத்திரரும், வீடு, மித்திரரும், என

புத்தி சலியாத பெருவாழ்வு, நிற்பது ஒரு கோடி கற்பமென மாயும், நிஷ்டையுடன், வாழும் அடியேன் யான், நித்தம் நினது தாளில் வைத்த ஒரு காதல், நிற்கும் வகை, ஓத நினைவாயே.

95. பணி சயில

கொடிய மறலியும், அவனது கடகமும் மடிய, ஒரு தினம், இரு பதம் வழிபடு குதலை அடியவன், நினது அருள் கொடு பொரும் அமர் காண, குறவர் மகள் புணர் புயகிரி சமுகமும், அறுமுகமும், வெகு நயனமும், ரவியுமிழ் கொடியும், அகிலமும் வெளிபட, இரு திசை இரு நாலும், படியும் நெடியென எழு புணரியும், திகிரி திகிரியும், வருகென வருதகு பவுரி வருமொரு, மரகத துரகத, மிசை ஏறி, பழைய அடியவருடன், இமையவர் கணம், இருபுடையும் மிகு தமிழ் கொடு, மறை கொடு வரவேணும்.

96. 'கொல்லிமலை' மேல் நின்ற பெருமாளே

தொல்லை முதல் தானொன்று, மெல்லியிரு பேதங்கள், சொல்லு குண மூவந்தம் எனவாகி, துய்ய சதுர் வேதங்கள், வெய்ய புலன் ஓரைந்து தொய்யு பொருள் ஆறங்கம், என மேவும், பல்ல பல நாதங்கள், அல்க பசு பாசங்கள், பல்கு தமிழ் தானொன்றி இசையாகி, பல்லுயிருமாய், அந்த மில்ல, சொருபானந்த பௌவமுறவே நின்றது அருள்வாயே.

97. 'ஊதிகிரிக்குட் கருத்துகந்தருள் பெருமாளே'

(என்) கோழை மனத்தைக் கெடுத்து, வன்புலஞான குணத்தைக் கொடுத்து, நின் செயல் கூறு மிடத்துக்கு இதத்து நின்றருள் புரிவாயே.

98. 'புகழி மலை' மேவு பெருமாளே

கருது பொருளாலும், மனைவி மகவான, கடலலையில் மூழ்கி அலைவேனோ (முருகா உனது) கமல பத வாழ்வு தர, மயிலின் மீது கருணையுடனே முன் வர வேணும்.

99. அகத்ய மாமுனி பொருப்பின் மேவிய பெருமாளே

(அடியேனை) பிணி அடுத்து, உபாதிகள் படுத்த, தாய், தமர் குலத்தர் யாவரும் நகைக்கவே, உடல் மங்குவேனைக் குறித்து, நீ அருகழைத்து மாதவர் கணத்தின் மேவு என

அளித்து, வேல் மயில் கொடுத்து, வேதமும் ஒருத்தனாமென, சிந்தை கூராய்.

100. கதிர் காமம் மேவிய பெருமாளே

யாவும் கிடைத்து க்ருஹ வாசியாகி, அம்மயக்கக் கடலாடி, நீடிய கிளைக்குப் பரிபாலனாய் உயிர் அவமே போம், (உன்) கிருபைச் சித்தமும் ஞான போதமும் அழைத்துத் தரவேணும், ஊழ் பவக் கிரிக்குள் சுழல் வேனை ஆள்வதும் ஒரு நாளே.

101. கதிர்காம வெற்பில் உறைவோனே

எதிரிலாத பக்தி தனை மேவி (உன்) இனிய தாள் நினைப்பை இரு போதும், இதய வாரிதிக்குள் உறவாகி, எனதுளே சிறக்க அருள்வாயே.

102. திருக் கொணாமலை வருவோனே

கொடியேனைக் கலக்கமாகவே மலக் கூடிலே, மிகு பிணிக்குளாகி, தவிக்காமலே, உனைக் கவிக்குளாய் சொல்லிக் கடைத் தேறவே செயுமொரு வாழ்வே, கதிக்கு நாதன் நீ, உனைத் தேடியே, புகழ் உரைக்கும் நாயேனை, அருட்பார்வையாகவே, கழற்குளாகவே, சிறப்பானதாய் அருள் தர வேணும்.

103. பழமுதிர் சோலை/மலை மிசை மேவு பெருமாளே

இரு நில மீதில் எளியனும் வாழ, எனது முன் ஓடி வரவேணும்.

104. அலையா மலை மேவிய பக்தர்கள் பெருமாளே

தரு தாரமுமாகிய சுற்றமும், நல்வாழ்வும், நிலாத பொருள், பதி, சதமாமிது தான் என உற்று, உனை நினையாத, சதுரா, உன தாளிணையைத் தொழ அறியாத நிர்மூடனை, நின் புகழ் தனை ஓதி, மெய்ஞ் ஞானமுறச் செய்வது ஒரு நாளே.

105. சோலைமலை மேவி நின்ற பெருமாளே

ஜோதி உணர்கின்ற வாழ்வு சிவம் என்ற சோகமது தந்து எனை ஆள்வாய்.

106. குலகிரியின் புக்குற்றுரை யுக்ரப் பெருமாளே

தலைமயிர் கொக்குக்கு ஒக்க நரைத்து கலகலெனப் பற் கட்டது விட்டுத் தளர் நடை பட்டுத் தத்தடியிட்டுத் தடுமாறி, தடி கொடு தத்திக் கக்கல் பெருத்திட்டுச்

சளியும் மிகுத்துப் பித்தமும் முற்றி, பலகாலும் தில தயிலத்திட்டு ஒக்க எரிக்க, திரிபலை, சுக்குத் திப்பிலியிட்டு , தெளிய வடித்துற்று, உய்த்த உடல் செத்திட்டு உயிர்போமுன், திகழ் புகழ் கற்றுச் சொற்கள் பயிற்றித், திருவடியைப் பற்றித் தொழுதுற்று செனன மறுக்கைக்கு, பரமுத்திக்கு அருள்தாராய்.

107. காசியிற் பிரதாப மாயுறை பெருமாளே

தாரணிக்கு அதிபாவியாய், வெகு சூது மெத்திய மூடனாய், மன சாதனைக் களவாணியாயுறும் அதி மோக தாப மிக்குள வீணனாய், பொரு வேல் விழிச்சிய ராகும் மாதர்கள் தாம் உயச் செயும் ஏது தேடிய நினைவாகிப் பூரணச் சிவ ஞான காவியம் ஓதுதல் புணர் வான நேயர்கள் பூசு மெய்த்திரு நீறு இடா இரு வினையேனை (திருநீறு) பூசி மெய்ப் பதமான சேவடி காண வைத்தருள், ஞானமாகிய போதகத்தினை ஏயுமாறு, அருள்புரிவாயே.

108. கச்சியில் நிற்கும் பெருமாளே

ஒருவர்க்கும் தெரிய அரும் சத்யத்தை தெரிசித்து உன் செயல் பாடித் திசை தொறும் கற்பிக்கைக்கு இனி அற்பம் திருஉளம் பற்றி செச்சை மணக்கும் சிறு சதங்கைப் பத்மம் எனக்கு என்று அருள்வாயே.

109. கச்சிக் கொற்றவா

(திருப்புகழ் பாடி) செந்தமிழ் பாடிக் குறையில் அன்புற்று, குற்றமறுக்கும் பொறைகள் நந்த, அற்பப் புத்தியை விட்டு, என் குணமடங்கக் கெட்டு, குணமற்றொன் றிலதான குணமடைந்து, எப்பற்றுக்களும் அற்று, குறியொடும் சுத்தப் பக்தர் இருக்கும் குருபதம் சித்திக்கைக்கு அருள் சற்றும் கிடையாதோ.

110. கச்சியுள் நிற்கும் பெருமாளே

(முருகா, குமரா, குகா) என்று அவிழும் அன்புற்று, கற்று, மனத்தின் செயல் ஒழிந்து எட்டப் பட்டதனைச் சென்று அடையும் பக்குவத்தைத் தமியேனுக்கு என்று அருள்வாயே.

111. சரண கஞ்சத்தில் பொற்கழல் கட்டும் பெருமாளே

புரைபடும் செற்றக் குற்ற மனத்தன், தவமிலன், சுத்தச் சத்ய அசத்யன், புகலிலன், சுற்றச் செத்தையுள் நிற்கும்

துரிசாளன், பொறையிலன், கொத்துத் தத்வ விகற்பம் சகலமும் பற்றிப் பற்றற நிற்கும் பொருளுடன் பற்றுச் சற்றுமில் வெற்றன், கொடியேன், நின் கரையறுஞ் சித்ரச் சொற்புகழ் கற்கும் கலையிலன், கட்டைப்புத்தியன், மட்டன், கதியிலன், செச்சைப் பொற்புய வெற்பும், கதிர் வேலும், கதிரையும், சக்ரப் பொற்றையும், மற்றும் பதிகளும், பொற்புக் கச்சியும், முற்றும், கனவிலும், சித்தத்தில் கருதிக் கொண்டு அடைவேனோ.

112. திருக் கோட்டமர்ந்த இந்திரர் தம்பிரானே

வென்றி வேலா, பரிமள மிக்கச் சிவந்த நின்கழல், பழுதற நற்சொற்றெரிந்து, அன்பொடு பகர்வது, இனி சற்று உகந்து தந்திட வந்திடாயோ.

113. சக்ரவர்த்திப் பெருமாளே

பாவத்துக்குத் தக்கவை பற்றித் திரியாதே, (திருப்புகழ்)
பாடப் பக்திச் சித்தம் எனக்குத் தரவேணும்.

114. காமக் கச்சியில் சால மேவு பொற் பெருமாளே

பாசம் விட்டு விட்டு ஓடிப்போனது போதும், இப்படிக் காகிலேன், இனி பாழ் வழிக்கு அடைக்காமலே, பிடித்து அடியேனை, பார் அடைக்கலக் கோலமாமென தாபரித்து, நித்தாரம் ஈது எனப்பாத பத்ம நற்போதையே தரித்து அருள்வாயே.

115. கச்சிச் சொக்கப் பெருமாளே

தம் பராக்கு அற நின்னை உணர்ந்து உருகி, பொற் பத்மக் கழல் சேர்வார் தம் குழாத்தினில், என்னையும் அன்பொடு வைக்கச் சற்றுக் கருதாதோ.

116. வேலெடுத்த சமர்த்தை உரைப்பவர் எவருக்கும் மனத்தில் நினைப்பவை அருள் வோனே

இளைப்பும், முசிப்பும், அவத்தையுமா யெடுத்து, குலைப்பொடு, பித்தமும் மேல் கொள, தலையிட்ட விதிப்படி அதனாலே, மேதினிக்குள் அபத்தன் என, பல பாடுபட்டு, புழுக்கொள் மலைக்குகை வீடு கட்டியிருக்கும் எனக்கு நின் அருள் தாராய்.

117. வெண்ணாவலரசு, மனைவஞ்சி தந்தருள் பெருமாளே

இந்த்ரிய தாப சபலமற வந்து நின் கழல் பெறுவேனோ.

118. கரிவனம் வாழ் ஜம்புநாதர் தந்தருள் பெருமாளே

*சுருதி, புராணங்கள், ஆகமம் பகர் சரியை, கிரியா, அண்டர் பூசை வந்தனை, துதியொடு நாடுந் தியான மொன்றையும் முயலாதே, சுமடமதாய், வம்பு, மால் கொளுந்திய, திமிரரொடே பந்தமாய் வருந்திய துரிசு அற, ஆநந்த வீடு கண்டிட அருள்வாயே.*

119. அருணையிலுலவிய பெருமாளே

*சலில லிபி என சனனமும் அலமலம், இனி உன் அடியாரோடு ஒரு வழிபட, இரு தமர பரிபுர, சரணமும், மவுனமும், அருள்வாயே.*

120. பாத மலர் மீதில் போத மலர் தூவிப் பாடுமவர் தோழத் தம்பிரானே.

*பாசத் துன்ப மூழ்கித் தாழ்வில் உயிர் வீழ்பட்டு, ஊழ்வினை விடாமல், சாவதன் முன் ஏவல் கொண்டிடாயோ.*

121. அருணை மாநகர் மேவி யுலாவிய பெருமாளே.

*கசட மூடனை யாளவுமே யருள், கருணை வாரிதியே, இரு நாயகி கணவனே, உனதாளிணை, மாமலர் தருவாயே.*

122. அருணையில் உறையும் பெருமாளே

*இரவியும், மதியும், தெரிவுற, எழும் அம்புவி தனில், இன மொன்றிடு மாதும், எழில் புதல்வரும், நின்று அழுது, உளம் உருகும், இடர்கொடு, நடலம்பல கூற, கருகிய உருவம்கொடு கனல் விழி கொண்டு, உயிரினை நமனும் கருதாமுன், கலைகொடு, பல துன்பமும் அகலிட, நின் கழலிணை கருதும்படி பாராய்*

123. அருணகிரிப் பெருமாளே

*இரவு பகல் பலகாலும், இயல் இசை முத்தமிழ் கூறி, திரம் அதனைத் தெளிவாகத் திரு அருளைத் தருவாயே.*

124. அருணசலந் திகழ் தம்பிரானே

*(யாவும் கிடைத்து க்ருக வாசியாகி, அம்மயக்கக் கடல் ஆடி, நீடிய, கிளைக்குப் பரிபாலனாய்) சீராடிச் சில நாள் போய், மெய்த்திரை வந்து கலந்து, உயிர் ஓட அங்கமோடு ஊடாடிப் பல நோயொடு, தடிகொண்டு குரங்கெனவே நடந்து, சொல் 'சீ'யொடு, இக்கிடை பாயோடு உக்கி அடங்கி அழிந்து, உயிரொடு உளைஞ்சு, ஒளியுங் கண்*

மாறிச், சேராமற் பொறி, கேளாமல் செவி, துன்பமொடு இன்பமுமே மறந்து பின் ஊரார் சுற்றமும், மாதோர் மக்களும் மண்டியும் அண்டையுடே குவிந்து, இது 'சீசீ சிச்சிசி' போகா நற் சனியன்' என்றிடவே கிடந்து உடல் மங்குவேனோ (மங்கிடு முன் உன் க்ருபைச் சித்தமும் ஞான போதமும் அழைத்துத் தர வேணும்.)

125. திருவருணகிரி மருவு தம்பிரானே

துன்ப மேவு ஜனன வலை, மரண வலை இரண்டும் முன் பின்தொடர்ந்து அணுகும் உடல், அநேக வடிவு இங்கு அடைந்து, அம்பரஞ் சிறு மணலை அளவிடினும் அங்கு உயர்ந்து, இங்கு உலந்து ஒன்று நாயேன், கனக புவி நிழல் மருவி, அன்புறுந் தொண்டர் பங்கு உற, இனி அருள் க்ருபை வந்து தந்து (தர) என்றும் உன் கடன், எனது உடல் உயிரும் உன் பரம், தொண்டு கொண்டு, அன்பரோடே கலவி, நலம் மருவி, வடிவஞ் சிறந்த உன் பதம் புணர் காண, மயில் புறமோடு இன்பு கொண்டு, அண்டரும் கனக மலர் பொழிய, உனது அன்பு உகந்து இன்று முன் சிந்தியாதோ.

126. ஆறுமுகப் பெருமாளே

மரண பக்குவமா நாள் (உன்) கமல முகங்களும், கோமளத்திலங்கு நகையும், நெடுங்கண்ணும், காதினில் துலங்கு கனக குதம்பையும் தோடும், வஜ்ர அங்கதமும், அடற் சுடர் வேலும், கடிது உலகெங்கணும் தாடியிட்டு வந்த மயிலும், இலங்க அலங்காரப் பொற் சதங்கை கழல் ஒலித் தண்டையங்காலும், ஒக்க வந்து வரம் எனக்கு அருள் கூர்வாய்.

127. சோண வெற் புயர்ந்த கோபுரத் தமர்ந்த பெருமாளே

சூலை, வெப்பு, அடர்ந்த வாதம், பித்தம் என்று சூழ் பிணக் கணங்கள், அணுகாதே, பாதகச் சமன், தன் மேதியிற் புகுந்து பாசம் விட்டெறிந்து பிடியாதே, பாவலற் கிரங்கி நாவலர்க் கிசைந்த பாடல் மிக்க செஞ்சொல் தர வேணும்

128. அருணை மீதிலே மேவு பெருமாளே

நினது தாளை நாள் தோறும் மனதில் ஆசை வீடாமல் நினையுமாறு நீ மேவி அருள்வாயே.

129. அருணா சலத்திலுறை பெருமாளே

சிவமார் திருப்புகழை என் நாவினிற் புகழ, சிவஞான சித்திதனை, அருள்வாயே.

130. தென் கயிலாயத்து அமர்ந்து வாழ்வருள் பெருமாளே

சங்கடனாகித் தளர்ந்து நோய்வினை வந்து உடல் மூடக் கலங்கிடா மதி தந்து, அடியேனைப் புரந்திடாய் உனது அருளாலே.

131. கனகசபை மருவு கந்தப் பெருமாளே

இருவினையின் மதிமயங்கித் திரியாதே, எழுநரகில் உழலும் நெஞ்சுற்று அலையாதே, பரமகுரு அருள் நினைந்திட்டு உணர்வாலே பரவு, தெரிசனை என்றற்கு அருள்வாயே.

132. செம்பொனின் அம்பல மேவு தம்பிரானே

துன்பம், முடங்கு, அழிநோய், சிரங்கொடு, சீ புழுவும், சலமோடு இறங்கிய புண் குடவன் கடியோடு, இளஞ் ஜன்னி, சூலை மிகுந்திடவே பறந்து, உடல் துஞ்சி, யமன் பதியே புகும் துயராழி விடும்படி, சீர் பதம், பெறு விஞ்சை தாராய்.

133. அம்பலம் தங்கும் பெருமாளே

தியங்கு சஞ்சலம், துன்பம் கடம், தொந்தம் செறிந்து, ஐந்திந்திரியம் பந்தம் தரும் துன்பம் படும் ஏழை திதம் பண்பொன்றிலன், பண்டன், தலன், குண்டன், சலன் கண்டன், தெளிந்துன்றன் பழந் தொண்டன், துயர் தீர புயங்கம், திங்களின் துண்டம், குருந்தின் கொந்து, அயன் தன்கம், பொருந்தும் கங்கை, தம் செஞ்சடை சூடி, புகழ்ந்தும், கண்டு உகந்தும், கும்பிடும், செம்பொன் சிலம்பு என்றும் புலம்பும், பங்கயம் தந்து, என் குறை தீராய்.

134. ஜய ஜய ஹர ஹர தேவா சுராதிபர் தம்பிரானே

அவகுண விரகனை, வேதாள ரூபனை, அசடனை, மசடனை, ஆசார ஈனனை, அகதியை, மறவனை, ஆதாளி வாயனை, அஞ்சு பூதம் அடைசிய சவடனை, மோடாதி மோடனை, அழி கருவழி வரு வீணாதி வீணனை, அழுகலை, அவிசலை, ஆறான ஊணனை, அன்பிலாத கவடனை, விகடனை நானா விகாரனை, வெகுளியை, வெகுவித மூதேவி மூடிய கலியனை, அலியனை, ஆதேச வாழ்வனை,

வெம்பி வீழும் களியனை, அறிவுரை பேணாத மானுட கசனியை, அசனியை, மாபாதனாகிய கதியிலிதனை, அடி நாயேனை ஆளுவது எந்த நாளோ.

135. புலிசையில் வாழ்வே

மோக வாரிதியில் நாள் தொறும் மூழ்குவேனை, உனது அடியாராகிய மோன ஞானிகளுடனே சேரவும் அருள்தாராய்.

136. புலியூர் பரமாகிய தம்பிரானே.

பாழ் வினையால் உழல் நாயன், உன் இடத்துத் தாள் பெற, ஞான சதாசிவ அன்பு தாராய்.

137. பெரும் பற்றப் புலியூர் தனில் மேவிய பெருமாளே

மனதாலே இறந்திட்டுப் பெறவே கதியாயினும், இருந்திட்டுப் பெறவே மதியாயினும், இரண்டில் தக்கதோர் ஊதியம் நீ, தர, இசைவாயே.

138. புலியூரா

ஜீவனொடுக்கம், பூத ஒடுக்கம், தேற உதிக்கும் பரஞான தீப விளக்கங்காண எனக்கு உன் சீதள பத்மம் தருவாயே.

139. புலியூர் துலங்கும் பெருமாளே.

கடை நாயேன், புகழடைந்து, உன் கழல் பணிந்து, ஒண் பொடியணிந்து, அங்கு ஆனந்தப் புனல் படிந்துண்டு, அவசமிஞ்சுந் தவசர், சந்தம் போலும், திண் புவனி கண்டு, இன்று அடி வணங்கும் செயல் கொள, அம் செம் சீர் செம்பொன் கழல் தாராய்.

140. புகழ் ஞானப் பெருமாளே

சுடர் அனைய திருமேனியுடைய அழகு, முது ஞான சொரூப கிரீட மேவும் முகம் ஆறும், சுரர் தெரியல் அளி பாட, ம்ழலை கதி நறை பாய, துகிர் இதழின் மொழி வேதமணம் வீச, அடர் பவள ஒளி பாய, அரிய பரிபுர மாட, அயில் கரமொடு எழில் தோகை மயிலேறி, அடியான் இருவினை நீறுபட, அமரர் இது பூரை, அதிசயம் என, அருள் பாட வரவேணும்.

141. தனிப் புலிசை வாழ்வே

வாடா மலர்ப் பதவி தா தா, எனக் குழறி, வாய் பாறி நிற்கும் எனை அருள் கூர, வாராய், மனக்கவலை தீராய்,

நினைத் தொழுது வாரேன் எனக்கு எதிர் முன் வரவேணும்.

142. வெள்ளிகரத் தமர்ந்த பெருமாளே.

அடல் அரி மகவு, விதி வழி ஒழுகும் ஐவரும் மொய்க் குரம்பையுடன், நாளும் அலைகடல் உலகில், வலம் வருகலக ஐவர் தமக்குள் நைந்து தடுமாறி, இடர்படும் அடிமை, உளம் உரை, உடலோடு எல்லை விட, ப்ரபஞ்ச மயல் தீர, எனதற, நினது கழல் பெற, மவுன எல்லை குறிப்பது ஒன்று புகல்வாயே.

143. வயிரவி வனத்தில் மேவும் பெருமாளே.

(உன்) பதமலர் உளத்தில், நாளும் நினைவுறு கருத்தர் தாள்கள் பணியவும், எனக்கு ஞானம் அருள்வாயே.

144. திருக் கரபுரத்து ஆறுமுகப் பெருமாளே.

சகல துக்கமும் அற, சகல சற்குணம் வர, தரணியில் புகழ் பெற, தகைமை பெற்று உனது பொற்சரணம் எப்பொழுதும் நட்பொடு நினைத்திட அருள் தருவாயே.

145. கரபுரப்பதி ஆறுமுகப் பெருமாளே

(உனைப்) பரவி உனது பொற்கரமும், முகமும், முத்தணியும் உரமும், மெய் ப்ரபையும், மருமலர் பதமும், விரவும் குக்குடமும் மயிலும் உட்பரிவாலே, படிய மனதில் வைத்து உறுதி சிவமிகுத்து எவரும் மகிழ்வுற, தரும நெறியின் மெய்ப் பசியில் வருமவர்க்கான ஒரு பிடி படைக்க அருள்வாயே.

146. ஆலங்காட்டில் நடமாடுங் கூத்தர் புதல்வோனே

உயிர் போகுமுன், படிமிசை தாளும் காட்டி உடலுறு நோய், பண்டேற்ற பழவினை பாவந் தீர்த்து, உன் அடியேனைப் பரிவோடு நாளுங்காத்து, விரிதமிழால் அம் கூர்த்த பார புகழ் பாடென்று ஆட்கொள வருவாயே.

147. பாக்கத்தில் மேவவல பெருமாளே

துக்கமான குறையுடையேனைக் கூப்பிட்டு, உசாவருளி, வாக்கு இட்டு, நாம மொழி கோக்கைக்கு நூலறிவு தருவாயே.

148. திருவேற்காடுறை வேதபுரீசுரர் தருசேயே

அடியேனை நின் அருளாலே பார்ப்பாயலையோ, அடியாரொடு, சேர்ப்பாயலையோ, உனதாரருள், கூர்ப்பாயலையோ, உமையாள் தரு குமரேசா, பார்ப்பாவலர் ஓது சொலால், முதுநீர் பாரினில் மீறிய கீரரை ஆர்ப்பாய், உனதாம் அருளாலே ஓர் சொல் அருள்வாயே.

149. நகரொற்றியூர் ஆதி சிவன் அருள்பாலா

கருவில் பிறவாதபடி உருவில் பிரமோத அடிகளை எற்றிடு, ராகவகை அதின் மீறிக் கருணைப் பிரகாச, உனது அருள் உற்றிட, ஆசில் சிவகதி பெற்று, இடரானவை ஒழிவேனோ.

150. மயிலை மாநகர் மேவிய கந்தப் பெருமாளே

அறமிலா அதி பாதக வஞ்சத் தொழிலாலே அடியனேன் மெலிவாகி மனஞ் சற்றிளையாதே திறல் குலாவிய சேவடி வந்தித்து அருள் கூடத் தினமுமே மிக வாழ்வுற இன்பைத் தருவாயே.

151. மயிலாபுரி மேவிய பெருமாளே

திரைவார் கடல் சூழ் புவிதனிலே, உலகோரொடு திரிவேன், உனை ஓதுதல் திகழாமே, தின நாளும் முன்னே துதி மனதார, பின்னே சிவ சுதனே, திரி தேவர்கள் தலைவா, மால் வரை மாது உமையாள் தருமணியே, குகனே என அறையா அடியேனும் உன் அடியாராய், வழிபாடுறுவாரொடு அருள் ஆதாரமாயிடு மகநாள் உளதோ? சொல அருள்வாயே.

152. கோசை நகர் வாழ வரு பெருமாளே.

நாத, சதகோடி மறை ஓலமிடும் நூபுர முன்னுன பத மலரை நலமாக நான் அநுதினமுமே, நினையவே, கிருபை நாடி அருளே அருள வருவாயே.

153. கோடை நகர் வாழ வந்த பெருமாளே

பொருள் தேடிப் போகமதிலே உழன்று பாழ் நரகெய்தாமல், உன்றன் பூ அடிகள் சேர அன்பு தருவாயே.

154. வடமேரு நகரிலுறையும் பெருமாளே

அறிய அறிய அறியாத அடிகள் அறிய அடியேனும், அறிவுள் அறியும் அறிவூர அருள்வாயே.

155. திருவக்கரை உறைவோனே

உலகு தனில் பல பிறவி தரித்து அற உழல்வது விட்டு இனி அடி நாயேன் உனது அடிமைத் திரள் அதனினும் உட்பட உபய மலர்ப்பதம் அருள்வாயே.

156. சிறுவை மேவி வர மிகுந்த பெருமாளே.

நறை விழாத மலர் முகந்த அரிய மோன வழி திறந்த நளின பாதம் எனது சிந்தை அகலாதே, நரர் சுராதிபரும் வணங்கும் இனிய சேவைதனை விரும்பி, நலனதாக அடியனென்று பெறுவேனோ.

157. திருவூரக மால் தரு மருகோனே

சிறியேனும், மால், அயன், பரனார், இமையோர், முனிவோர் புரந்தரனாதியரே தொழ மாதவம் பெரு தாளினையே, தினம் மறவாதே வாழ் தரும் சிவபோக நன்னூல் நெறியே விரும்பி, வினாவுடனே தொழுது வாழ வரந்தருவாய் அடியேன் இடர் களைவாயே.

158. தேவனூர் விளங்க வந்த பெருமாளே

ஆசை கூரு நண்ப, என்று மாமயூர கந்த என்றும் ஆவல் தீர என்று நின்று புகழ்வேனோ.

159. அதிகை மாநகர் மருவிய பெருமாளே

இடர் உறாது உனை நினைபவர் துணை கொள இனிமை போலெழு பிறிவியெனும் உவரியினிடை கெடாது இனி இருவினை இழிவினில் இழியாதே, இசையினால் நாள்தோறும் இமையவர், முனிவர்கள், ககன பூபதியிடர் கெட அருளிய, இறைவா, நின் ஆறிரு புயமென உரைசெய அருள்வாயே.

160. பாடலவ வள நகர் மருவிய பெருமாளே

உணர்விலி, செபமுதல் ஒன்று தானிலி, நிறையிலி, முறையிலி, அன்பு தானிலி, உயர்விலி யெனினும் என் நெஞ்சுதான் நினைவு அழியாமுன், ஒரு திரு மரகத துங்க மாமிசை, அறுமுகம் ஒளி விட வந்து, நான்மறை உபநிடமதனை விளங்க நீ அருள்புரிவாயே.

161. வயல் மேவு நெல் வாயிலில் வீற்றிருந்த பெருமாளே

நினைவு பாழ்பட வாடி, நோக்கிழந்து, வறுமையாகிய தீயின் மேற் கிடந்து நெளியும் நீள் புழுவாயினேற்கு இரங்கி அருள்வாயே.

162. காழிப்பதி மேவியுகந்த பெருமாளே

ஊனத்தசை தோல்கள் சுமந்த காயப் பொதி, மாய மிகுந்த ஊசற் சுடு நாறு குரம்பை, மறை நாலும், ஓதப்படு நாலு முகன்றனால் உற்றிடு, கோலமெழுந்து, ஓடித் தடுமாறி உழன்று, தளர்வாகிக் கூனித் தடியோடு நடந்து, ஈனப்படு கோழை மிகுந்த கூளச் சடம் இதை உகந்து, புவி மீதே கூசப் பிரமாண பிரபஞ்ச மாயக் கொடு நோய்கள் அகன்று, கோலக் கழலே பெற இன்று அருள்வாயே.

163. பாகை வளம்பதி பெருமாளே

ஈளை சுரங் குளிர், வாதமெனும் பல நோய்கள் வளைந்து அற இளையாதே, ஈடுபடுஞ் சிறு கூடு புகுந்து இடுகாடு பயின்று உயிர் இழவாதே, மூளை எலும்புகள் நாடி நரம்புகள் வேறு படுந் தழல் முழுகாதே. மூலமெனும் சிவ யோக பதந்தனில் வாழ்வு பெறும்படி மொழிவாயே.

164. திரு இடைக்கழி பெருமாளே

பகரும் முத்தமிழ் பொருளும், மெய்த்தவ பயனும், எப்படிப் பல வாழ்வும், பழைய முத்தியின் பதமும், நட்புறப் பரவு கற்பகத்தரு வாழ்வும், புகரில் புத்தியுற்று, அரசு பெற்றுறப் பொலியும் அற்புதப் பெருவாழ்வும், புலன் அகற்றிட பலவிதத்தினைப் புகழ் பலத்தினைத் தரவேணும்.

165. கோடை அதிப இடைக்கழி மேவு பெருமாளே

உழலும் விருப்புடன் ஓதும் பல சவலைக் கலை தேடி ஒரு பயனைத் தெளியாது, விளியா முன் உன கமலப் பதம் நாடி, உருகி, உளத்து அமுதூற, உனது திருப்புகழ் ஓத அருள்வாயே.

166. திரு மாகாள மாநகர் மேவிய பெருமாளே

(உலகில் விருதா அலைந்து உழன்று, அல்லல் படுவேனை) நான் ஆர், நீ எவன், எனாமல், எனது ஆவி கவர் சீர் பாதமே கவலையாயுமனவே நிதமும், நாதா, குமரா, முருகா எனவும் ஓத அருள் புரிவாயே.

167. வழுவூரில் நிலாவிய பெருமாளே

கரு ஊறிய நாள் முந்நூறும் எழுமல தேகமும், ஆவலும், ஆசைகளும், கபடமாகிய பாதக தீதற மிடிதீரக் கனி வீறிய

போத மெய்ஞ்ஞானமும், இயல் ஆர் சிவநேசமுமே வர, கழல் சேர் அணி நூபுர தாளிணை நிழல் தாராய்.

168. செங்காடு மேவிய ஆறுமுகவா அமரர் பெருமாளே

சங்கோதை நாதமொடு கூடி, வெகு மாயையிருள் வெந்தோட, மூல அழல் வீச, உபதேசமது தண் காதில் ஓதி, இரு பாதமலர் சேர அருள் புரிவாயே.

169. விஜயபுரந்தனில் மேவிய பெருமாளே

மாய அடலை உடம்பை அவாவியே அநவரதஞ், சில சாரமில், ஔடதமும், பல யோகமும், முயலா நின்று அலமரு சிந்தையின் ஆகுலம் அலமல மென்று இனி யானும் நின் அழகிய தண்டை விடாமலர் அடைவேனோ.

170. ஆரூரில் பெருமாளே

நீதான் எத்தனையாலும் நீடுழிக் கிருபையாகி மாதானத் தனமாக மாஞானக் கழல் தாராய்.

171. ஆரூர் பதியில் ஆறுமுக

இரவு பகலற, இகல் அற, மலமற, இயலும் மயலற, விழியில் நீர் இழிவற இதயம் உருகியே, ஒரு குள பதம் உற, மடலிடை எழுத அரியவள், குறமகள் இரு தனகிரியினில், முழுகின இளையவன் எனும் உரை இனிமை பெறுவதும் இரு பதம் அடைவதும் ஒரு நாளே.

172. சோம நாதன் மடமேவும் பெருமாளே

உடலும் உயிர் தானுமாயும் உணர்வில், ஒரு காலிராத உளமும் நெகிழ்வாகுமாறு, அடியேனுக்கு, இரவு பகல் போன ஞான, பரமசிவ யோக தீரம் என மொழியும், வீசுபாச கன கோப எமபடரை மோதும் மோன உரையில் உபதேச வாளை எனது பகை தீர நீயும் அருள்வாயே.

173. அழகிய சிக்கல் சிங்கார வேலவ

மிக அருமைப் பட்டு உன் பாத தாமரை, சரணம் எனப் பற்றும் பேதையேன் மிசை விழியருள் வைத்துக் குன்றாத வாழ்வையும் அருள்வாயே.

174. நாகப்பட்டினத் தமர்ந்த பெருமாளே

வம்பில் உழல் நாயேன் கோபமற்று, மற்று மந்த மோகமற்று, உனைப் பணிந்து கூடுதற்கு முக்தி என்று தருவாயே.

175. எண்கண் அமர்ந்திருந்த பெருமாளே

சந்தனம் திமிர்ந்து அணைந்து, குங்குமம் கடம்பிலங்கு, சண்பகஞ் செறிந்து இலங்கு திரள் தோளும், தண்டைஅம் சிலம்பு அலம்ப வெண்டையும் சலன் சலன் என்று சஞ்சிதம் சதங்கை கொஞ்ச மயிலேறி திந்திமிந், திமிந், திமிந்தி, தந்தனந் தனந் தனென்று, சென்றசைந்து உகந்து வந்து க்ருபையோடே, சிந்தை அம்குலம் புகுந்து, சந்ததம் புகழ்ந்து உணர்ந்து, செம்பதம் பணிந்து இரு என மொழிவாயே.

176. குடவாயிற்பதி உறைவோனே

தமியேனும் மயிலாகித் திரிவது தானற்றிட, மல மாய குணமது மாற, மறையால் மிக்க அருள் பெறவே அற்புத மதுமாலைப் பதம் அருள்வாயே.

177. வலிவல நகருறை பெருமாளே

அடுத்த பேர், மனை, துணைவியர் தமர், பொருள், பெருத்த வாழ்வு, இது சதமென மகிழ்வுறு, அசட்டன், ஆதுலன், அவமது தவிர, நின் அடியாரோடு அமர்த்தி, மாமலர் கொடு வழிபட, எனையிருத்தியே, பரகதி பெற, மயில் மிசை அரத்த மாமணியணி கழலிணை தொழ அருள்தாராய்.

178. கோடி நகர் மேவி வளர் பெருமாளே.

காதலுடன் ஓதும் அடியார்களுடனே ஆடி, ஒரு கால் முருக வேள் எனவும் அருள்தாராய்.

179. திரு வீழியில் வாழ் பெருமாளே

ஒரு கால் முருகா, பரமா, குமரா, உயிர்கா என ஓத அருள்தாராய்.

180. மருத்துவக்குடி வாழ்வே தேவர்கள் பெருமாளே

உரைத்த புத்திகள் கேளா நீசனை, அவத்த மெத்திய ஆசாபாசனை, உளத்தில் மெய்ப்பொருள் ஓரா மூடனை, அருளாகி, உயர்ச்சி பெற்றிடு மேலான மூதுரை

அளிக்கும் நற்பொருளாயே மாதவ உணர்ச்சி பெற்றிடவே, நீ தாளிணை அருள்வாயே.

181. பந்தணையில் வந்திடும் சரவணப் பெருமாளே

(அடியேன்) துயரற, ப்ரபை வீசும் தண்டைகள் கலின் கலின் கலினென, கிண்கிணி கிணின் கிணின் கிணின் கிணினெனத் தண் கொலுசுடன் சிலம்பு அசைய, உட்பரிவாகிச் சந்ததமும், வந்து, இரும் பரிமளப் பங்கய பதங்கள், என் கொடுவினைச் சஞ்சல மலம் கெடும்படி அருள் புரிவாயே.

182. கந்துகாபுரி நகர் வாழ்வுறு பெருமாளே.

நிதி பொங்கப் பல தவங்களால் உனை மொழியும் புத்திகள் தெரிந்து நானுனை, நிகர் சந்தத்தமிழ் சொரிந்து பாடவும் அருள்தாராய்.

183. இடைமருதில் இமையவர் பெருமாளே.

இணையடிகள் பரவும், உனது அடியவர்கள் பெறுவதுவும், ஏசிடார்களோ பாச நாசனே இருவினை மும்மலமற இறவியோடு பிறவியற, ஏக போகடாய், நீயும் நானுமாய் இறுகும் வகை பரம சுகம் அதனை அருள்வாயே.

184. இடை மருதில் மேவு தம்பிரானே

மதுரகவி அடைவு பாடி வீடு அறிவு முதிர, அரிய தமிழோசையாக, ஒளி வசனமுடைய வழிபாடு சேரும் அருள் தந்திடாயோ.

185. கும்பகோண நகர் வந்த பெருமாளே

காலையில் எழுந்து உன் நாமமே மொழிந்து, காதல் உமை மைந்தா, என ஓதி, காலமும் உணர்ந்து, ஞான வெளி கண்கள் காண அருள் என்று பெறுவேனோ.

186. சோமீசர் கோயில்தனில் மகிழ்வு பெற உறை பெருமாளே

இரவினிடை துயிலுகினும், யாரோடு பேசுகினும், இளமையும், உன் அழகு புனை ஈராறு தோள் நிரையும், இரு பதமும் அறுமுகமும் யான் ஓத ஞானமதை அருள்வாயே.

187. கொட்டை நகர் பெருமாளே

துஷ்டனெனக், கட்டனெனப், பித்தனென, ப்ரஷ்டனென, சுற்றும் மறச்சித்தனெனத் திரிவேனைத்

துக்கம் அறுத்து, கமலப் பொற்பதம் வைத்து பதவிச் சுத்தியணைப் பக்தரில் வைத்து அருள்வாயே.

188. சிவபுரந்தனில் வாழ்குரு நாயக

மனமெனும் பொருள், வான் அறை கால், கனல், புனலுடன் புவி கூடியதோர் உடல், வடிவு கொண்டு, அதிலே பதிமூணெழு வகையாலே வரு சுகம், துயர், ஆசையிலே உழல் மதியை வென்று, பராபர ஞான நல்வழி பெறும்படி, நாயடியேனை நின் அருள்சேராய்.

189. கூந்தலூர் உறை பெருமாளே

வெகு மலரது கொடு வேண்டியாகிலும் ஒரு மலர் இலை கொடு, ஓர்ந்து யான் உனை, விதமுறு பரிவொடு வீழ்ந்து தாள் தொழ அருள்வாயே.

190. பழையாறைப் பொற் கோயிலின் மேவிய பெருமாளே

வினையேனைக் கோபித்துத் தாய் என நீ ஒரு போதத்தைப் பேச, அதால் அருள் கோடித்துத் தான் அடியேன் அடி பெறவேணும்.

191. தஞ்சை மாநகர்ப் பெருமாளே

எம்பிரானே, உனைச் சிந்தியாது ஒழித்த இந்திர ஜால இப்பிரமை தீர, இங்கு வா எனப் பண்பினால் அழைத்து எங்குமான மெய்ப்பொருள் தாராய்.

192. நெடுங்கள வளம் பதி தம்பிரானே

பஞ்ச புலனும், பழைய இரண்டு வினையும், பிணிகள், பஞ்சென எரிந்து, பொடியங்கமாகிப் பண்டு அற, உடன் பழைய தொண்டர்களுடன் பழகி, 'பஞ்சவர் வியன் பதியுடன்' குலாவ குஞ்சர முகன் குணமொடு அந்த வனம் வந்து உலவ, கொஞ்சிய சிலம்பு, கழல், விந்து நாதம் கொஞ்ச, மயிலின் புறமேல் வந்தருளி என் கவலை கொன்று, அருள் நிறைந்த கழல் இன்று தாராய்.

193. வயலூர் மேவும் பெருமாளே.

பகர்தலிலா தாளையேதும் சிலதறியா ஏழை நான் உன் பதிபசு பாசோபதேசம் பெறவேணும்.

194. கருவூரிற் பெருமாளே

மதியால் வித்தகனாகி மனதால் உத்தமனாகி பதிவாகிச் சிவஞானப் பரயோகத் தருள்வாயே.

195. கருவூரழகப் பெருமாளே.

நாயேன், பசுபாசமும் விட்டு அறிவால் அறியப்படு பூரண நிஷ்களமான, பதிபாவனை உற்று அநுபூதியில் அப்படியே அடைவித்து அருள்வாயே.

196. பட்டாலி மருவுமமரர்கள் பெருமாளே.

கொக்காக நரைகள் வருமுன் மிக்காய இளமையுடன் முயல் குற்றேவல் அடிமை செயும் வகை அருள்வாயோ.

197. பட்டாலி நகருறை பெருமாளே.

இமவானின் மங்கைக்குப் பாகன், இருடிகள் எங்கட்கு சுவாமி, என அடி வந்திக்கப் பேசிய சிவநூலின் மந்த்ர ப்ரஸ்த்தார தரிசன யந்த்ரத்துக்கேள்வி அலமலம் வம்பிற் சுற்றாது பரகதி அருள்வாயே.

198. திருமுருகன் பூண்டிப் பெருமாளே.

அவசிய முன் வேண்டிப் பலகாலும் அறிவில் உணர்ந்து ஆண்டுக் கொரு நாளில் தவ செபமும் தீண்டிக் கனிவாகி, சரணமதும் பூண்டற்கு அருள்வாயே.

199. அவிநாசிப் பெருமாளே.

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப் பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே.

200. அவிநாசியுள் மேவிய பெருமாளே

எனைக் கடந்திடு பாசமுமே கொடு சினத்து வந்தெதிர் சூலமுமே கையில் எடுத்து எறிந்து அழல் வாய்விடவே, பயமுறவேதான், இழுக்க வந்திடு தூதர்களானவர் பிடிக்கு முன்பு, உனதாள் மலராகிய இணைப்பதந்தரவே மயில் மீதினில் வரவேணும்.

கனத்த செந்தமிழால் நினையே தினம் நினைக்கவும் தருவாய் உனது ஆரருள், கருத்திருந்து உறைவாய் எனது ஆருயிர் துணையாக, இணைப்பதந்தரவே மயில் மீதினில் வரவேணும்.

201. தனிச்சயந்தனில் உறை பெருமாளே

உரைத்த சம்ப்ரம வடிவு திரங்கிக்கறுத்த குஞ்சியும் வெளிறிய பஞ்சொத்து ஒலித்திடும் செவி செவிடுற, ஒண்கண் குருடாகி, உரத்த வெண்பலும் நழுவி, மதங்கெட்டு, இரைத்து, கிண்கிணென இருமல் எழுந்திட்டு, உளைப்புடன் தலை கிறு கிறு எனும் பித்தமும்

மேல்கொண்டு, இரத்த மின்றிய புழுவினும் விஞ்சிப் பழுத்து, உளம், செயல், வசனம் வரம்பற்று, அடுத்த பெண்டிரும் எதிர்வர, நிந்தித்து, அனைவோரும் அசுத்தனென்றிட, உணர்வது குன்றித் துடிப்பதும் சிறிது உளது, இல தென் கைக் கவத்தை வந்து உயிர் அலமரு மன்றைக்கு அருள்வாயே.

202. மதுரையில் வழிபட்டு உம்பரார் தொழும் தம்பிரானே.

அலகில் அவுணரைக் கொன்ற தோளென, மலை தொளை உருவச் சென்ற வேலென, அழகிய கனக தண்டை சூழ்வன புண்டரீக அடியென, முடியிற் கொண்ட கூதளமென, வன சரியைக் கொண்ட மார்பென, அறுமுகமென நெக்கு என்பெலாம் உருக அன்புறாதோ.

203. திருவாணிக் கூடல் பெருமாளே

கலைமேவு ஞானப்ரகாசக் கடலாடி, ஆசைக் கடலேறி, பலமாய வாதிற் பிறழாதே, பதிஞான வாழ்வைத் தருவாயே.

204. ஸ்ரீ புருட மங்கை தங்கிய பெருமாளே

வேடரென நின்ற ஐம்புலன் நாலு கரணங்களின் தொழில் வேறுபட நின்று, உணர்ந்து அருள் பெறுமாறு என் வேடை கெட, வந்து சிந்தனை மாயை யற, வென்று துன்றிய வேத முடிவின் பரம்பொருள் அருள்வாயே.

205. எழுகரை நாட்டவர் தம்பிரானே

முருக, ஷடாக்ஷர, சரவண, கார்த்திகை முலை நுகர் பார்த்திபா, என்று பாடி, மொழி குழறத் தொழுது, அழுது அழுது ஆட்பட முழுது மலாப் பொருள் தந்திடாயோ.

206. முருகா

ஆடு வெம்பண காகோத அசனம் ஊறு கண்டிட மேல் வீழ் தோகையில் ஆரும் வண்குமரேசா, ஆறிரு — புயவேளே, ஆறு நின்று அருளாலே தாள் தொழ ஆண்மை தந்தருள் வாழ்வே, தாழ்வற ஆதி தந்தவ, நாயேன் வாழ்வுற அருள்வாயே.

207. வடிவும் இளமையும் வளமையும் அழகிய பெருமாளே

அடியேனுக்கு இசைய இது பொருளென அறிவுற, ஒரு வசனமுற, இருவினையற, மலமற, இரவு பகலற, எனதற, நினதற, அநுபூதி இனிமை தருமொரு தனிமையை,

மறைகளின் இறுதி அறுதியிட, அரிய பெறுதியை, இருமை ஒருமையில் பெருமையை வெளிபட மொழிவாயே.

208. குருகு பெயரிய வரை தொளைபட விடு சுடர் வேலா

நெடிய வடகுவடு இடியவும், எழுகிரி நெறு நெறென நெரியவும், முதுபணி பதி நிபிட முடி கிழியவும், நிலம் அதிரவும், விளையாடும் நிகரில் கலபியும், ரவியுமிழ் துவசமும், நினது கருணையும் உறைதரு பெருமையும், நிறமும், இளமையும், வளமையும், இரு சரணமும், நீப முடியும், அபிநவ வனசரர் கொடியிடை தளர, முகுள, புளகித, தனகிரி தழுவிய திரள் தோளும், மொகு மொகென மதுகரம் முரல், குரவு அணி, முருகன், அறுமுகன் என வருவன பெயர் முழுதும் இயல்கொடு பழுதற மொழிவதும் ஒரு நாளே.

209. எரி உமிழ் உரக சுடிகையில் நடநவில் அரிதிரு மருகோனே

பகிர நினைவு ஒரு தினையளவிலுமிலி, கருணையிலி, உனது அருணையோடு தணியல், பழநி மலை குருமலை, பல மலை பாடிப் பரவு மிடறிலி, படிறு கொடு இடறு சொல் பழகி, அழகிலி, குலமிலி, நலமிலி, பதிமையிலி, பவுஷுமிலி, மகிமையிலி, குலாலன், திகிரி வருமொரு செலவினில் எழுபது செலவு வருமன பவுரி கொடு அலமரும் திருகன் உருகுதல், அழுகுதல், தொழுகுதல், நினையாத திமிரன், இயல்பிலி, அருளிலி, பொருளிலி, திருடன், மதியிலி, கதியிலி, விதியிலி, செயலில் உணர்வு இலி, சிவபதம் அடைவதும் ஒரு நாளே.

210. கரிய வேடுவர் சிறுமியோடு உருகிய பெருமாளே

நரகிலே விழும் அவலனை, அசடனை, வழிபடாத ஓர் திருடனை, மருடனை, நலமிலா அக கபடனை, விகடனை, வினையேனை, நடுவிலாதன படிறு கொள் இடறு சொல் அதனில் மூழ்கிய மறவனை, இறவனை, நளினம் ஆர்பதமது பெற ஒரு வழி அருள்வாயே.

211. அத்தர்க்கு பொருள் கற்பித்து புகழ் கொண்ட வாழ்வே

படிதனில் உறவெனும் அனைவர்கள் பரிவோடு பக்கத்தில் கத்திட்டு, துயர்கொண்டு பாவ, பணைமர விறகுடைய

அழலிடை உடலது பற்றக் கொட்டுகள் தட்டிச்சுட்டு, அலையொன்றி, ஏகக்கடி சமன் உயிர்தனை இருவிழி அனலது கக்க, சிக்கென முட்டிக்கட்டி உடன்று போமுன், கதி தரும் முருகனும் என நினை நினைபவர் கற்பில் புக்க அறிவொக்கக் கற்பது தந்திடாயோ

212. பவள மத யானை பின்பு வந்த முருகோனே

அறிவும், அறியாமையும் கடந்த அறிவு திருமேனி என்று உணர்ந்து, உன் அருண சரணாரவிந்தம் என்று அடைவேனோ.

213. வேளைக்காரப் பெருமாளே

பொய்க்குள் ஒழுகி அயராமல் போது மொய்த்த காலை இருதாளைப் பூண, பொற்பும், இயல் புதுமையாகப் பாட புகல்வாயே.

214. ஆண்மையுடன் நிற்கும் முருகோனே

பாடல், இசை, மிக்க ஆடல்கொடு, பத்தியொடு நினை பக்தர் பெருவாழ்வே, பாவ வினையற்று உன் நாமம் நினை புத்தி, பாரினில் அருள்கைக்கு வரவேணும்.

215. தேவ தேவ தேவாதி தேவ பெருமாளே.

ஆவி சாவியாகாமல் நீ சற்றருள்வாயே

216. வடிவேலா

ஓதும் பலகலை கீதம் சகலமும் – ஓதும் – படி உனது அருள்பாடி நான் உன் திருவடி பேணும்படி இருபோதும் கருணையில் மறவாது உன் நாமம் புகழ்பவர் பாதம் தொழ, இனி நாடும்படி அருள்புரிவாயே.

217. வேல் கொண்டமர் செய்த பெருமாளே

கீதம், புகழ், இசை நாதம் கனிவொடு வேதம் கிளர்தர மொழிவார் தம், கேடின் பெருவலி மாளும்படி அவரோடும் கெழு முதல், உடையோனே, ஓதும் பல அடியாரும் கதிபெற, நான் உன் கழலிணை பெறுவேனோ.

218. கலப நீல மாயூர இளையோனே

எனது யானும் வேறாகி, எவரும் யாதும் யான் ஆகும் இதய பாவனாதீதம் அருள்வாயே.

219. இமையோர் தமக்கும் அரசாகி அவர் சிறை மீள விட்ட பெருமாளே.

பரிவால் உளத்தில் முருகா எனச் சொல் பகர் வாழ்வெனக்கும் அருள்வாயே.

220. சிவந்த காலும் தண்டையும் அழகிய பெருமாளே

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறு கேளும், இசைந்த ஊரும் பெண்டிரும் இளமையும் வளமேவும் விரிந்த நாடும் குன்றமும் நிலையென மகிழாதே, விளங்கு தீபங்கொண்டுனை வழிபட அருள்வாயே.

221. ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா

அசந்த போது என் துயர் கெட மாமயில் வரவேணும்.

222. புவியது சூழத் திரிவோனே

எருமையில் ஏறித் தருமனும் வரவுற்று இறுகிய பாசக் கயிறாலே, எனை வளையாமல் (உன்) துணை நினைவேனுக்கு இயல், இசை பாடத் தரவேணும்.

223. சூராரியே விசாகனே சுரர் தம்பிரானே

ஈராறு தோளும், ஆறுமா முகமோடு ஆரு நீபவாச மாலையும், ஏறான தோகை நீல வாசியும், அன்பினாலே ஏனோரும் ஓதுமாறு தீதற, நான் ஆசு பாடி, ஆடி நாள்தோறும், ஈடேறுமாறு ஞான போதகம் அன்புறாதோ

224. நிசாசரர் குலத்தை சீராவினால் அறுத்து அறுத்து ஒதுக்கிய பெருமாளே.

உலகேழும் யாளுக, நாம அற்புதத் திருப்புகழ், தேனூற ஓதி எத்திசைப் புறத்தினும் ஏடேவு ராஜதத்தினைப் பணித்ததும், இடராழி ஏறாத மாமலத்ரய குணத்ரய நாளு விகார புற்புதப் பிறப்பற ஏதேமமாய் எனக்கு அநுக்ரகித்ததும் மறவேனே.

225. அமரர் பெருமாளே.

வயதாகி, நரைகளும் பெரிதாயே போயே கிழவன் என்றொரு பேரே சார்வே நடைகளும் பல தாறே மாறே விழலாகி நயனமும் தெரியாதே போனால், விடிவது என்று அடியேனே தானே, நடன குஞ்சித வீடே கூடாது அழிவேனோ.

226. அயில் தொட்ட அரசே இமையோர் பெருமாளே.

உமையெனும் மயில் பெற்ற மயில் வாகனனே, வனிதையர் அறுவர்க்கும் ஒரு பாலகனே, உளமுருகிய பக்தர் உறவே, என ஓதி உருகுதல் சற்றுமறியேன், வறியேன், இருவினை யிடையிட்ட கொடியேன் அடியேன் உணர்விலி பெற முக்தி தருவாயே.

227. மத்த மயில் மீதேறி வருவோனே

பொற்கழலை நாள்தோறும் உட்பரிவினால் ஓதும் புத்தி நெடிதும் வாழ்வு புரிவாயே.

228. வடிவுற்றொரு தோகையில் வந்தருள் பெருமாளே

கவலைப் புலமோடுற என் துயர் கழிவித்து, உன தாளினை அன்பொடு, கருதித் தொழும் வாழ்வு தந்திட நினைவாயே.

229. வேலேவி சூர் கெட்டோடத் தாக்கிய பெருமாளே.

அபராதக் கபடனை, வெகு பரிதாபனை, நாளும் ப்ரமிக்கு நெஞ்சனை, உருவமாறி முறை முறை, ஆசார ஈன சமயந் தோறும், களவு சாத்திரம் ஓதி சாதித்தேனை, சாத்திர நெறி போய், ஐம்புலன் வழி ஒழுகிய மூகந்தனிற் பிறந்தொடு நொடியின் மீள அழிதரும் ஆதேச வாழ்வை, நிலையென்றே, அம்புவியின் மேல் பசு பாசத்தே பட்டேனை, பூக்கழல் இணை சேர பொறியிலிதனை அதிபாவியை, நீடுங் குணத்ரயங்களும், வரும் அநேக வினைகளும் மாயா விகாரம் முழுதும் சாடும் பொருளின் மேல் சிறிது ஆசைப் பாடற்றேனை, காப்பதும் ஒரு நாளே.

230. சத கோடி வானவர்கள் தம்பிரானே.

சுருதி, வெகுமுக புராண கோடிகள் சரியை க்ரியை, மக யோக மோகிகள் துரித பரசமய பேதவாதிகள் என்றும் ஓடித் தொடர உணர அரிதாய துரிய பொருளை அணுகி, அனுபோக மானவை தொலைய, இனிய ஒரு ஸ்வாமியாகி நின் பிரகாசம் கருதி உருகி, அவிரோதியாய், அருள்பெருகு, பரம சுக மாமகோததி, கருணை அடியரொடு கூடி ஆடி மகிழ்ந்து நீபக் கனகமணி வயிர நூபுராரிய, கிரண சரண, அபிராம கோமள, கமலயுகளம் மறவாது பாட நினைந்திடாயோ.

231. ராகவன் மருகோனே

உன் சீர்பாத சேகரனாகவும் நாயினன் மோகா விகார விடாய் கெட ஓடவே, சீராகவே, கலையால் உனை ஓதவும் அருள்வாயே.

232. அயில் முன் துரந்து பொருவேளே

உகந்து, மனமும் குளிர்ந்து, பயன் கொள் தருமம் புரிந்து, ஒடுங்கி நினையும் பணிந்து புகழ்வேனோ.

233. முருகனே சுர குஞ்சரி ரஞ்சித மணவாளா

புகரில் சேவல, தந்துர சங்க்ரம நிருதர் கோப, க்ரௌஞ்ச நெடுங்கிரி பொருத சேவக, குன்றவர் பெண் கொடி மணவாள, புனித பூசுரரும் சுரரும் பணி புயச பூதர, என்று இருகண் புனல் பொழிய மீமிசை, அன்பு துளும்பிய மனனாகி, அகில பூத உடம்பும், உடம்பினில் மருவும் ஆருயிரும், கரணங்களும் அவிழ, யானும் இழந்த இடந்தனில், உணர்வாலே, அகில வாதிகளும், சமயங்களும் அடைய, ஆமென, அன்றென நின்றதை, அறிவிலேன் அறியும்படி இன்றருள் புரிவாயே.

234. சரவண தகப்பன் சாமி என வரு பெருமாளே

கவிக் கொண்டாடு புகழினை படிக்கும் பாடு திறமிலி, களைக்கும் பாவ சுழல்படும் அடிநாயேன், கலக்குண்டாகு புவிதனில் எனக்குண்டாகு பணிவிடை கணக்குண்டாதல் திருவுளம் அறியாதோ.

235. அழகா தமிழ்ப் பெருமாளே.

மனமாயையோடு, இரு காழ்வினையற, மூதுடை மலம் வேரற, மகிழ் ஞானக அநுபூதியின் அருள் மேவிப், பதமேவும் உன் அடியாருடன் விளையாடுக அடியேன் முனே பரிபூரண க்ருபாகரமுடன் ஞானப்பரிமேல் அழகுடன் ஏறி, விண்ணவர் பூமழை அடிமேல் விழ, பல கோடி வெண்மதி போலவே வருவாயே.

236. ஆலவிடத்தை தரித்த அற்புதர் குமரேசா

நான் படும் பாடு தொலைத்துக் கழிக்க அக்ருபை தேடும் எனை, தற்புரக்க உன் திருபாதுகையைப் பற்றி நிற்க வைத்து எனை அருளாதோ.

237. **பூங்கோதை கொங்கை விரும்பிய பெருமாளே**

*வேண்டாமை ஒன்றையடைந்து, உளம் மீண்டு ஆறி, நின் சரணங்களில் வீழ்ந்து, ஆவல் கொண்டு உருக அன்பினை உடையேனாய், வேந்தா, கடம்பு புனைந்தருள் சேந்தா, சரண் சரண் என்பது வீண் போமது ஒன்று அல என்பதை (என் மனம்) உணராதோ.*

238. **சித்த, விசாகா, இயற் சுரர் பெருமாளே.**

*(நான்) தட்டழியாது, திருப்புகழ் கற்கவும், ஓதவும் முத்தமிழ் தத்வ ஞானம் எனக்கருள் புரிவாயே.*

239. **செந்தமிழ் தெளிவு கொண்டு அடியார்க்கு விளம்பிய பெருமாளே.**

*முனை அழிந்தது, மேட்டி குலைந்தது, வயது சென்றது, வாய்ப்பல் உதிர்ந்தது, முதுகு வெஞ்சிலை காட்டி வளைந்தது, ப்ரபையான முகம் இழிந்தது, நோக்கும் இருண்டது, இருமல் வந்தது, தூக்கம் ஒழிந்தது, மொழி தளர்ந்தது, நாக்கு விழுந்தது, அறிவே போய், நினைவு அயர்ந்தது, நீட்டல் முடங்கலும் அவசமும் பல ஏக்கமும் முந்தின, நெறி மறந்தது, மூப்பு முதிர்ந்தது, பல நோயும் நிலுவை கொண்டது, பாய்க் கிடைகண்டது. சல மலங்களின் நாற்றமெழுந்தது, நிமிஷம் இங்கு இனியாச்சுது என் முன்பு, இனிதருள்வாயே.*

240. **பத்தர்க்கு அருளிய குருநாதா**

*பொய்க்குற்றுச் சுற்றி திரிகிற புலையேனை பொற்பித்துக் கற்பித்து, உனதடி அர்ச்சிக்கச், சற்றுக் கிருபை செய்ய, புத்திக்குச் சித்தித் தருள்வதும் ஒரு நாளே.*

241. **புரமூணும் தவிடாக தழல்பார்வை அன்றளித்த குருநாதா**

*கடையேன் மலங்கள் முற்றும் இரு நோயுடன் பிடித்த கலியோடிறந்து, சுக்க[illegible]யாகி, களிகூர என்றனுக்கு மயிலேறி வந்து முக்தி கதியேற அன்பு வைத்து உன் அருள்தாராய்.*

242. **அரிபிரமர் கும்பிடும் பெருமாளே.**

*உனதருளையின்றி, இங்கு ஒரு துணையும் இன்றி, நின்று உளையும் ஒரு வஞ்சகன், பஞ்சபூத உடலது சுமந்து அலைந்து உலகு தொறும் வந்து வந்து உழலுமது துன்பு கண்டு அன்புறாதோ.*

243. அண்டர் சிறை வெட்டி விட்ட பெருமாளே.

(முருகா, குமரா, குகா என்று) நெஞ்சுருகி நெக்கு நெக்கு நின்று தொழு நிர்க்குணத்தர் நிந்தனை இல்பத்தர், வெட்சி மலர் தூவும், நின் பதயுகப்ரசித்தி என்பன வகுத்துரைக்க, நின் பணி, தமிழ்த்ரயத்தை அருள்வாயே.

244. நாடும் அடியார்கள் மனது உறைவோனே

வருகாலன் ஆதி விதியோடு பிறழாத வகை தேடி, எனது ஆவிதனையே குறுகி வருபோது ஆதி முருகா, ஆதி முருகா, ஆதி முருகா எனவும் ஆதி முருகா நினைவு தருவாயே.

245. பூரண புவன காரணா

அரசாகி வாழினும், வறுமை கூரினும், நினது வார்கழலொழிய மொழியேனே.

246. தேவர் மெய்ப் பெருமாளே.

இருள் மூடி, சுத்த மதி போய், வினைத்துட்டனவனாய், மனத்துக்கமுறவே, மிகச் சுழலாதே சொற்கள் பல நாவினில் தொட்டு, உன் இரு தாள் தொழ சொற் கமல வாழ்வு சற்றருள்வாயே.

247. உளம் நெகிழ்ந்து, அசத்தான உரை மறந்து, சத்தான உனை உணர்ந்து கஸ்தூரி மணம் நாறும், உபய பங்கயத் தாளில், அபயம் என்று உனைப்பாடி, உருகி நெஞ்சு சற்று ஓதில் இழிவாரோ (ஓத அருள் தாராய்).

248. சென்றேயிடங்கள் கந்தா எனும் போது செஞ்சேவல் கொண்டு வரவேணும்.

249. நாயேன் உய்யவே, பொற்றாள்களும், ஆறிருகையும் நீபத்தாள் முகமாறும் உள் உள்ள ஞான போதமும் நீ தர வருவாயே.

✿ ✿ ✿ ✿ ✿

| | |
|---|---|
| வெற்றிவேல் முருகனுக்கு | அரஹரோஹரா |
| திருப்பரங்கிரி தீரனுக்கு | ,, |
| செந்திலாண்டவனுக்கு | ,, |
| பழநி ஆண்டிக்கு | ,, |
| சுவாமி மலைக் குமரனுக்கு | ,, |
| திருத்தணிகை தீரனுக்கு | ,, |
| சோலைமலைக் கிழவனுக்கு | ,, |
| குன்றுதோறாடும் குமரனுக்கு | ,, |
| பாலதண்டாயுத பாணிக்கு | ,, |
| விராலிமலை வீரனுக்கு | ,, |
| சிக்கல் சிங்கார வேலவனுக்கு | ,, |
| வெற்றிவேல் முருகனுக்கு | ,, |
| வெற்றிவேல் முருகனுக்கு | ,, |

| | | | |
|---|---|---|---|
| முருகா | முருகா | முருகா | முருகா |
| முருகா | முருகா | முருகா | முருகா |
| முருகா | முருகா | முருகா | முருகா |
| முருகா | முருகா | முருகா | முருகா |
| முருகா | முருகா | முருகா | முருகா |
| முருகா | முருகா | முருகா | முருகா |
| முருகா | முருகா | முருகா | முருகா |
| முருகா | முருகா | முருகா | முருகா |

முருகா

அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜோதிர்கமய
ம்ருத்யோர்மா அம்ருதம்கமய
ஹரி : ஓம்
சாந்தி சாந்தி சாந்தி:
ஓம் ஓம் ஓம்

பொய்யாகிய பிரபஞ்சத்தினின்று என்னை
மெய்ப்பொருளின்கண் அழைத்துச்செல்.
அக்ஞான இருளினின்று என்னை
ஞான ஒளியின்கண் அழைத்துச் செல்
மரணத்தினின்று என்னை அழியாப் பொருளாகிய
ஆத்மாவின்கண் அழைத்துச் செல்.

# मन्त्र पुष्पम्

योऽपां पुष्पं वेद । पुष्पवान् प्रजावान् पशुमान् भवति । चन्द्रमा वा अपां पुष्पम् । पुष्पवान् प्रजावान् पशुमान् भवति । य एवं वेद । योऽपामायतनं वेद । आयतनवान् भवति । अग्निर्वा अपामायतनम् । आयतनवान् भवति । योऽग्नेरायतनं वेद ॥

आयतनवान् भवति । आपो वा अग्नेरायतनम् । आयतनवान् भवति । य एवं वेद । योऽपामायतनं वेद । आयतनवान् भवति । वायुर्वा अपामायतनम् । आयतनवान् भवति । यो वायोरायतनं वेद । आयतनवान् भवति ॥

आपो वै वायोरायतनम् । आयतनवान् भवति । य एवं वेद । योऽपामायतनं वेद । आयतनवान् भवति । असौ वै तपन्नपामायतनम् । आयतनवान् भवति । योऽमुष्य तपत आयतनं वेद । आयतनवान् भवति । आपो वा अमुष्य तपत आयतनम् ॥

आयतनवान् भवति । य एवं वेद । योऽपामायतनं वेद । आयतनवान्
भवति । चन्द्रमा वा अपामायतनम् । आयतनवान् भवति । यश्चन्द्रमस
आयतनं वेद । आयतनवान् भवति । आपो वै चन्दमस आयतनम् ।
आयतनवान् भवति ॥

य एवं वेद । योऽपामायतनं वेद । आयतनवान् भवति । नक्षत्राणि वा
अपामायतनम् । आयतनवान् भवति । यो नक्षत्रणामायतनं वेद ।
आयतनवान् भवति । आपो वै नक्षत्राणामायतनम् । आयतनवान् भवति । य
एवं वेद ॥

योऽपामायतनं वेद । आयतनवान् भवति । पर्जन्यो वा अपामायतनम् ।
आयतनवान् भवति । यः पर्जन्यस्यायतनं वेद । आयतनवान् भवति । आपो
वै पर्जन्यस्याऽऽयतनम् । आयतनवान् भवति । य एवं वेद । योऽपामायतनं
वेद ॥

आयतनवान् भवति । संवत्सरो वा अपामा॒यतनम् । आयतनवान् भवति । यस्संवत्सरस्यायतनं वेद । आयतनवान् भवति । आपोवै संवत्सरस्यायतनम् । आयतनवान् भवति । य एवं वेद । योऽप्सुनावं प्रतिष्ठितां वेद । प्रत्येव तिष्ठति ॥

राजाधिराजाय प्रसह्यसाहिने । नमो वयं वैश्रवणाय कुर्महे । समेकामान्कामकामाय मह्यम् । कामेश्वरो वैश्रवणो ददातु । कुबेराय वैश्रवणाय महाराजाय नमः ॥

निघृष्वैरसमायुतैः । कालैर्हरित्वमापन्नैः । इन्द्रायाहि सहस्रयुक् । अग्निर्विभ्राष्टिवसनः । वायुश्श्वेतसिकद्रुकः । संवथ्सरो विषूवर्णैः । नित्यास्तेऽनुचरास्तव । सुब्रह्मण्योगं सुब्रह्मण्योगं सुब्रह्मण्योम् ।

ओं तत्पुरुषाय विद्महे महासेनाय धीमहि । तन्नः षण्मुखः प्रचोदयात् ।

ईशानस्सर्वविद्यानाम् ईश्वरस्सर्वभूतानां ब्रह्माधिपतिर्ब्रह्मणोधिपतिर्ब्रह्मा शिवो मे अस्तु सदाशिवोम् ॥

# मन्त्रपुष्पं समर्पयामि

हरिः ओम् ॥ अग्निमीळे पुरोहितं यज्ञस्य देवमृत्विजम् । होतारं रत्नधातमम् ॥ हरिः ओम् ॥

इषेत्वोर्जेत्वा वायवस्थोपायवस्थ देवोवस्सविता प्रार्पयतु श्रेष्ठतमाय कर्मणे ॥ हरिः ओम् ॥

हरिः ओम् । अग्नआयाहि वीतये गृणानो हव्यदातये । निहोता सत्सि बर्हिषि ॥ हरिः ओम् ॥

हरिः ओम् ॥ शन्नो देवीरभिष्टये आपो भवन्तु पीतये । शंयोरभिस्रवन्तु नः ॥ हरि ओम् ॥

अथातो दर्शपूर्णमासौ व्यारव्यास्यामः ।

प्रातरग्निहोत्रं हुत्वा । अन्यमाहवनीयं प्रणीयाग्नीनन्वादधाति ।

नगतश्रियो अन्यमग्निं प्रणयति ॥ हरिः ओम् ॥

॥ हरिः ओम् ॥

| | | |
|---|---|---|
| धर्मसूत्रं | - | अथातो धर्मजिज्ञासा |
| ब्रह्मसूत्रं | - | अथातो ब्रह्मजिज्ञासा |
| व्याकरणसूत्रं | - | वृद्धिरादैच् अदेङ्गुणः |

हरिः ओम्

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्यायेन मार्गेण महीं महीशाः
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकास्समस्ताः सुरिकनो भवन्तु

**असतो मा सद्गमय ।**
**तमसो मा ज्योतिर्गमय ॥**
**मृत्योर्मा अमृतं गमय ।**
**ॐ**
**शान्तिः शान्तिः शान्तिः ॥**
**ॐ ॐ ॐ**

## स्वस्ति वचनं

ओं । भद्रं कर्णेभिः श्रृणुयाम देवाः । भद्रं पश्ये-माक्षभि - र्यजत्राः । स्थिरैरङ्गैस्तुष्टुवागंसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः । स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः । स्वस्ति नः पूषा विश्ववेदाः । स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः । स्वस्ति नो बृहस्पतिर्दधातु । ओं शान्तिः शान्तिः शान्तिः ।

आनन्दो ब्रह्मेति व्यजानात् । आनन्दाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते । आनन्देन जातानि जीवन्ति । आनन्दं प्रयन्त्यभिसंविशन्तीति । सैषा भार्गवी वारुणी विद्या । परमे व्योमन्प्रतिष्ठिता । य एवं वेद प्रतितिष्ठति । अन्नवानन्नादो भवति । महान् भवति प्रजया पशुभिर्ब्रह्म- वर्चसेन । महान् कीर्त्या ॥

॥ श्री - वर्चस्व - मायुष्य - मारोग्य - माविधाच्छोभमानं महीयते । धान्यं धनं पशुं बहुपुत्रलाभं शतसंवत्सरं दीर्घमायुः ॥

❖ ❖ ❖

# கந்தரலங்காரம்
## பாட்டு முதற்குறிப்பு அகராதி


| | பாட்டு எண் | | பாட்டு எண் |
|---|---|---|---|
| அடலருணைத் | காப்பு | சிகராத்ரி | 52 |
| அராப்புனை | 74 | சிந்திக்கிலேன் | 60 |
| அழித்துப் | 2 | சுழித்தோடு | 36 |
| ஆங்காரம் | 55 | சூரிற்கிரியிற் | 49 |
| ஆலுக்கணி | 62 | சூலம்பிடித் | 107 |
| ஆவிக்கு மோசம் | 105 | செங்கேழடுத்த | 104 |
| இடுதலைச் | 100 | சேந்தனைக் | 72 |
| இராப்பகலற்ற | 103 | சேலிற் | 97 |
| உதித்தாங் | 39 | சேல்பட் | 40 |
| ஒரு பூதரு | 45 | சேல்வாங்கு | 77 |
| ஒருவரைப் | 13 | சொல்லுகை | 10 |
| ஒளியில் | 8 | சொன்ன | 19 |
| ஓரவொட்டார் | 4 | தகட்டிற் | 82 |
| ஓலையுந்தூத | 27 | தடக்கொற்ற | 96 |
| கடத்திற் | 29 | தடுங்கோள் | 16 |
| கண்டுண்ட | 37 | தண்டாயுதமுந் | 25 |
| கதிதனை | 98 | தந்தைக்கு | 69 |
| கருமான் மருகனை | 91 | தாராகணமெனு | 81 |
| கவியாற் கடல் | 43 | தாவடியோட்டு | 15 |
| காட்டிற் | 85 | திருந்தப்புவன | 5 |
| காவிக்கமலக் | 99 | திருவடியுந் | 102 |
| கிழியும்படி | 56 | துருத்தி | 71 |
| கிளைத்துப் | 32 | தெய்வத்திருமலை | 23 |
| கின்னங்குறித் | 24 | தெள்ளிய | 94 |
| குசைநெகிழா | 11 | தேங்கிய வண்டத் | 83 |
| குப்பாச | 14 | தேரணியிட்டு | 3 |
| குமரா சரணஞ் | 87 | தேனென்று | 9 |
| கூர் கொண்ட | 78 | தொண்டர் | 92 |
| கொள்ளித்தலை | 106 | தோலாற்சுவர் | 44 |
| கோடாத | 76 | நாளென்செயும் | 38 |
| கோழிக்கொடிய | 20 | நிணங்காட்டுங் | 42 |
| சலங்காணும் | 101 | நீயான ஞான | 46 |
| சளத்திற் | 7 | நீர்க்குமிழிக்கு | 66 |
| சாகைக்கு | 54 | நீலச்சிகண்டியில் | 26 |
| சாடுஞ்சமரத் | 68 | நெற்றாப் | 58 |

| | பாட்டு எண் | | பாட்டு எண் |
|---|---|---|---|
| பங்கேருகனெ | 89 | போக்கும் வரவும் | 73 |
| படிக்கின்றிலை | 75 | மண்கமழுந்தி | 93 |
| படிக்குந் | 50 | மரணப்ரமாத | 21 |
| படைபட்ட | 12 | மலையாறு | 51 |
| பட்டிக்கடாவில் | 64 | மாகத்தை | 80 |
| பத்தித்திருமுகம் | 47 | மாலோன் மருகனை | 90 |
| பத்தித்துறை | 35 | முடியாப் பிறவி | 33 |
| பந்தாடு மங்கையர் | 79 | மைவரும் | 84 |
| பாதித்திருவுரு | 63 | மொய்தாரணி | 22 |
| பாலென்பது | 30 | யான்றானெனு | 95 |
| பாலேயனைய | 41 | வணங்கித் துதிக்க | 88 |
| புத்தியை வாங்கி | 48 | வரையற் | 61 |
| பெரும்பைம் | 6 | விழிக்குத்துணை | 70 |
| பெறுதற்கரிய | 67 | வெட்டுங்கடா | 65 |
| பேற்றைத் | 1 | வேடிச்சி | 53 |
| பொக்கக்குடிலிற் | 31 | வேதாகம சித்ர | 17 |
| பொங்கார | 59 | வேலாயுதன் | 86 |
| பொட்டாக | 34 | வேலே விளங்கு | 28 |
| பொருபிடியுங் | 57 | வையிற்கதிர் | 18 |


✿ ✿ ✿ ✿ ✿

# கந்தரலங்காரம்

## காப்பு

அடலருணைத்திருக் கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவருகிற்சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையில்
தடப டெனப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே

## நூல்

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப்ர பஞ்சமென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட வா! செஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்க்ரு பாகரனே 1

அழித்துப் பிறக்கவொட் டாவயில் வேலன் கவியையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்ட தென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே 2

தேரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில் வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே 3

ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டார்மல ரிட்டுனதாள்
சேரவொட் டாரைவர் செய்வதென் யான்சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட்டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே 4

திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே 5

பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி னான்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மாநந்தந் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச் செந் தேனும் புளித்தறக் கைத்ததுவே 6

சளத்திற் பிணிபட் டசட்டுக் ரியைக்குட் டவிக்கு மென்றன்
உளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா யவுண ருரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்து வெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேல் தொட்ட காவலனே 7

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின் மேல்
அளியில் விளைந்ததொ ராநந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வா! முக மாறுடைத் தேசிகனே 8

தேனென்று பாகென் றுவமிக் கொணாமொழித் தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே 9

சொல்லுகைக் கில்லையென் றெல்லா மிழந்து சும்மா விருக்கும்
எல்லையுட் செல்ல எனைவிட்ட வாஇகல் வேலனல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக் கல்வரைக்
கொவ்வைச் செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோளண்ணல் வல்லபமே 10

குசைநெகி ழாவெற்றி வேலோ னவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசை கொண்ட வாகனப் பீலியின் கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு அடியிடவெண்
டிசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்பட்டதே 11

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் [illegible]கயென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் [illegible]லதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்[illegible]படலம்
இடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே 12

ஒருவரைப் பங்கி லுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே 13

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று வாயிரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங் குலுங்கவிண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே 14

தாவடி யோட்டு மயிலிலுந் தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடு முட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே 15

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்கவைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே 16

வேதா கமசித்ர வேலா யுதன் வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்த மரணாக அல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே 17

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே 18

சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் தொளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம் பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே 19

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோ
யூழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்க ளத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே 20

மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்த துணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞானா கரசுர பாஸ்கரனே 21

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே 22

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம் பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே 23

கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச்சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே 24

தண்டா யுதமுந் திரிசூல மும் விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே 25

நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்: மரிப் பார்வெறுங் கர்மிகளே 26

ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்த செச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே 27

வேலே விளங்குகை யான் செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லால் மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளையெவ் வாறு புகல்வதுவே 28

கடத்திற் குறத்தி பிரானரு ளாற்கலங் காதசித்தத்
திடத்திற் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்
படத்திற் கழுத்திற் பழுத்தசெவ் வாயிற் பணையிலுந்தித்
தடத்திற் றனத்திற் கிடக்கும்வெங் காம சமுத்திரமே 29

பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலேன்ப தாகத் திரிகின்ற நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற்ற மயூர மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே 30

பொக்கக் குடிலிற் புகுதா வகைபுண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட் டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர் வேல் தொட்ட காவலனே 31

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
தொளைத்துப் புறப்பட்ட வேற்கந்த னேதுறந் தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங்கண்ணூர்க்
கிளைத்துத் தவிக்கின்ற என்னை யெந்நாள்வந் திரட்சிப்பையே 32

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற் பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே 33

பொட்டாக வெற்பைப் பொருதகந் தாதப்பிப் போனதொன்றற்
கெட்டாத ஞான கலைதரு வாயிருங் காமவிடாய்ப்
பட்டா ருயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே 34

பத்தித் துறையிழிந் தாநந்த வாரி படிவதினல்
புத்தித் தரங்கந் தெளிவதென் றோபொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ ர்னைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா வதிகொண்ட கொற்றவனே 35

சுழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்ப மின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டு முத்தைக்
கொழித் தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே 36

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேன்மற வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடூ டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெஞ் சூர்க்கொன்ற ராவுத்தனே 37

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடி வந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே 38

உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந் தீர்த்தெனை யுன்னிலொன்றா
விதித்தாண் டருள்தருங் காலமுண் டோவெற்பு நட் டுரக
பதித் தாம்பு வாங்கிநின் றம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமரு காமயி லேறிய மாணிக்கமே 39

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால் பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே 40

பாலே யனைய மொழியார்த மின்பத்தைப் பற்றியென்றும்
மாலேகொண்டுய்யும் வகையறி யேன்மலர்த் தாள்தருவாய்
காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன் மருகசெவ் வேலவனே 41

நிணங்காட்டுங் கொட்டிலை விட்டொரு வீடெய்தி நிற்கநிற்குங்
குணங்காட்டி யாண்ட குருதே சிகனங் குறச்சிறுமான்
பணங்காட்டு மல்குற் குருகுங் குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்தி தெங்கே யெனக்கிங்ஙன் வாய்த்ததுவே 42

கவியாற் கடலடைத் தோன்மரு கோனைக் கணபணக் கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத் திறலரக்கர்
புவியாற் பெழுத்தொட்ட போர்வேல் முருகனைப் போற்றியன்பாற்
குவியாக் கரங்கள்வந் தெங்கே யெனக்கிங்ஙன் கூடியவே 43

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கைந் நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்
வேலாற் கிரிதொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே 44

ஒருபூ தருமறி யாத்தனி வீட்டி லுரையுணர்வற்
றிரு பூத வீட்டி ராமலென் றானிரு கோட்டொருகைப்
பொரு பூ தரமுரித் தேகாச மிட்ட புராந்தகற்குக்
குரு பூத வேலவ னிட்டூர சூர குலாந்தகனே 45

நீயான ஞான விநோதந் தனையென்று நீயருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி லாய்சித்ர மாதரல்குற்
றோயா வுருகிப் பருகிப் பெருகித் துவளுமிந்த
மாயா விநோத மநோதுக்க மானது மாய்வதற்கே 46

பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மாநந்த சாகரத்தே 47

புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றி லேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை யேற்கென் குறித்தனையே 48

சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் தொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண் தண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே 49

படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூர னடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே 50

மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே 51

சிகராத்திரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுஞ் செந்தமிழாற்
பகரார்வ மீபணி பாசசங் க்ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி துரங்க ந்ருபகுமரா
குகராட் சசபட்ச விட்சோப தீர குணதுங்கனே 52

வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தாற்
றேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே 53

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை யேயிலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில் வாகனனே 54

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய் வார்யம தூதருக்கே 55

கிழியும் படி யடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவ னூர்க்குச் செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே 56

பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண் டிருவினை யோமிறந்தால்
ஒரு பிடி சாம்பருங் காணாது மாய வுடம்பிதுவே 57

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கினிய பிரானிக்கு முல்லையுடன்
பற்றாக்கை யும்வெந்து சங்க்ராம வேளும் படவிழியாற்
செற்றார்க் கினியவன் தேவேந்த்ர லோக சிகாமணியே 58

பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரு மேற்பவர்க் கிட்ட திடாமல் வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே 59

சிந்திக் கிலேனின்று சேவிக் கிலேன்றண்டைச் சிற்றடியை
வந்திக் கிலேனொன்றும் வாழ்த்து கிலேன்மயில் வாகனனைச்
சந்திக் கிலேன்பொய்யை நிந்திக்கி லேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும் போக்குதற்கே 60

வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித் தவா பஞ்ச பூதமுமற்
றுரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே 61

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனும் மேருவுமே 62

பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வே லனைச்சென்று போற்றியுய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ அழுது தொழுதுருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே யெனக்கிங்ஙன் சந்தித்ததே 63

பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாது விடேன்வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மாள்திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே 64

வெட்டுங் கடாமிசைத் தோன்றும் வெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டுங் கராசலங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும்விட் டோடஎட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரத்தனே 65

நீர்க் குமிழிக்கு நிகரென்பர் யாக்கைநில்லாது செல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற்கும ரற்கன் பிலாதவர் ஞான மிகவுநன்றே 66

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற் றிலேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரச வல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே 67

*சாடுஞ் சமரத் தனிவேல் முருகன் சரணத்திலே*
*ஓடுங் கருத்தை யிருத்தவல் லார்க்குகம் போய்ச்சகம்போய்ப்*
*பாடுங் கவுரிபவுரிகொண் டாடப் பசுபதிநின்*
*றாடும் பொழுது பரமா யிருக்கு மதீதத்திலே* 68

*தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்*
*கந்தச் சுவாமி யெனைத்தேற் றியபின்னர்க் காலன் வெம்பி*
*வந்திப் பொழுதென்னை யென்செய்ய லாஞ்சத்தி வாளொன்றினாற்*
*சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோபத்ரி சூலத்தையே* 69

*விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா*
*மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த*
*பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி*
*வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே* 70

*துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்*
*தருத்தி யுடம்பை யொறுக்கிலென் னாஞ்சிவ யோகமென்னுங்*
*குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன் சொன்ன*
*கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே* 71

*சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்*
*வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி*
*காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்*
*சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே* 72

*போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்*
*வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து*
*தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே*
*ஆக்கு மறுமுக வாசொல் லொணாதிந்த ஆநந்தமே* 73

*அராப்புனை வேணியன் சேயருள் கொண்டு மவிழ்ந்த அன்பாற்*
*குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டுங் கொடியஜவர்*
*பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டுமென்றால்*
*இராப்பக லற்ற இடத்தே யிருக்கை யெளிதல்லவே* 74

*படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்*
*முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு*
*மிடிக்கின் றிலைபர மாநந்த மேற்கொள விம்மிவிம்மி*
*நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே* 75

*கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த*
*தாடாள னேதென் தணிகைக் குமரநின் றண்டையந்தாள்*
*சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாதகையும்*
*பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே* 76

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப் பயோதரஞ் சேரஎண்ணி
மால்வாங்கி யேங்கி மயங்காமல் வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்குங் களிற்றான் கிழத்தி கழுத்திற்கட்டு
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி பூங்கழல் நோக்குநெஞ்சே 77

கூர்கொண்ட வேலனைப் போற்றாம லேற்றங்கொண் டாடுவிர்காள்
போர்கொண்ட கால னுமைக்கொண்டு போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரு மாளிகை யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவரை யோகெடு வீர்நும் மறிவின்மையே 78

பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா இளங்கும ராஅம ராவதி காவலனே 79

மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றன்வந் தாலென்முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற் பாய்சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந் தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே 80

தாரா கணமெனுந் தாய்மார் அறுவர் தருமுலைப்பால்
ஆரா துமைமுலைப் பாலுண்ட பால னரையிற்கட்டுஞ்
சீராவுங் கையிற் சிறுவாளும் வேலுமென் சிந்தையவே
வாரா தகலந்த காவந்த போதுயிர் வாங்குவனே 81

தகட்டிற் சிவந்த கடம்பையு நெஞ்சையுந் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தருளாய் புண்ட ரீகனண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர லோகத்தை முட்டவெட்டிப்
பகட்டிற் பொருதிட்ட நிட்டூர சூர பயங்கரனே 82

தேங்கிய அண்டத் திமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள் கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் தளந்தனிவேல்
வாங்கி யனுப்பிடக் குன்றங்க ளெட்டும் வழிவிட்டவே 83

மைவருங் கண்டத்தர் மைந்தகந் தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற கல்வியும்போய்ப்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே 84

காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகவெளி தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே 85

வேலா யுதன்சங்கு சக்ரா யுதன்விரிஞ் சன்னறியாச்
சூலா யுதன்தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோனரு ளாய கவசமுண் டென்
பாலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே 86

குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே 87

வணங்கித் துதிக்க அறியா மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்று வாய் கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கை யலகைகொண் டாடப் பிசிதர்தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலா யுதந்தொட்ட நிர்மலனே 88

பங்கே ருகனெனைப் பட்டோ லையிலிடப் பண்டுதளை
தங்காலி லிட்ட தறிந்திலனோதனி வேலெடுத்துப்
பொங் கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோ னறியி னினிநான் முகனுக் கிருவிலங்கே 89

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே 90

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேல னைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே 91

தொண்டர்கண் டண்டி மொண் டுண்டிருக் குஞ்சுத்த ஞானமெனுந்
தண்டையம் புண்டரி கந்தரு வாய் சண்ட தண்டவெஞ்சூர்
மண்டலங் கொண்டுபண் டண்டரண் டங்கொண்டு மண்டி மிண்டக்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல் வேல்தொட்ட காவலனே 92

மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளை திருவரையிற்
கிண்கிணி யோசை பதினா லுலகமுங் கேட்டதுவே 93

தெள்ளிய ஏனலிற் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் தாள்வேட் டிலைசிறு வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத் தோதகச் சொல்லை நல்ல
வெள்ளிய நித்தில வித்தார மூரலை வேட்ட நெஞ்சே 94

யான்றா னெனுஞ்சொல் லிரண்டுங்கெட் டாலன்றி யாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன்க்ரு பாகரன் கேள்வியினாற்
சான்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே 95

தடக்கொற்ற வேள்மயி லேயிடர் தீரத் தனிவிடில்நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே 96

சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தநந்தன் பணாமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே 97

கதிதனை யொன்றையுங் காண்கின்றி லேன்கந்த வேல்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன் பாய்நரம் பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம் வேகின்றதே 98

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடி போற்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே 99

இடுதலைச் சற்றுங் கருதேனைப் போதமி லேனையன்பாற்
கெடுதலி லாத் தொண்டரிற்கூட் டியவா! கிரௌஞ்சவெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி யறவிச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாச வினைவிலங்கே 100

சலங்காணும் வேந்தர் தமக்குமஞ் சார்யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்று ளொருகவி தான்கற் றறிந்தவரே 101

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க் கண்களுங்
குருவடி வாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே 102

இராப்பக லற்ற இடங்காட்டி யானிருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையந் தாளரு ளாய்கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரிபோற்ற நின்ற கடவுள்மெச்சும்
பராக்ரம வேல நிருதசங் கார பயங்கரனே 103

செங்கே ழுடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்வந் தெதிர்நிற்பனே 104

ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருள்வாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே 105

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே 106

சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்து வருங்
காலன் தனக்கொரு காலுமஞ் சேன்கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே 107

✿ ✿ ✿

# கந்தரந்தாதி
# பாட்டு முதற்குறிப்பு அகராதி


| | பாட்டு எண் | | பாட்டு எண் |
|---|---|---|---|
| உண்ணாமுலை | காப்பு-2 | செல்லலை | 93 |
| சிகண்டிதத்த | 67 | செல்வந்திகழு | 100 |
| சிகாவல | 81 | செவிக்குன்ற | 26 |
| சிகைத் தோகை | 51 | செவ்வந்தி | 6 |
| சிக்குற | 28 | செற்றைவரும் | 22 |
| சித்தத்தரங்க | 90 | சென்னிய | 3 |
| சித்திக்க | 32 | சேகரவாரண | 68 |
| சித்திரமிக்க | 50 | சேடி வணங்கு | 92 |
| சிந்தாகுல | 21 | சேதகமொன்று | 49 |
| சிந்துர வித்தக | 70 | சேதனந்தந்து | 33 |
| சிலைமத | 9 | சேதாம்பல | 44 |
| சிவசிவசங்கர | 84 | சேதிக்கனை | 94 |
| சிறுமிக்கு | 97 | சேந்தமரா | 85 |
| சிறைவர | 12 | சேமரவிக்கம் | 40 |
| சிற்றம்பலத் | 38 | சேயவன் | 48 |
| சீகரசிந்து | 60 | சேரப்பொருப் | 74 |
| சீதனங்கோடு | 8 | சேரிக்குவடு | 17 |
| சீயனம் போதி | 19 | சேர்ப்பதுமால | 59 |
| சீரங்கராக | 98 | சேலையிலாருந் | 89 |
| சீராமராம | 80 | சேவகமன்ன | 64 |
| சீர்க்கை | 37 | சேவற்கொடி | 16 |
| சீலங்கன | 58 | சேறலைத்தா | 86 |
| சீவனசத்து | 69 | திகழுமலங்கற் | 29 |
| செகம்புரவார் | 24 | திகிரிவலம்புரி | 91 |
| செச்சைய | 36 | திகைப்படங்க | 65 |
| செந்திலகத் | 14 | திக்கத்தி | 11 |
| செப்பத்தமதிலை | 60 | திக்கரச | 61 |
| செப்பாரமுதலை | 79 | திங்களுமாசுண | 71 |
| செப்புங்கவச | 2 | திசாமுக | 73 |
| செம்மலைவண்டு | 76 | திடம்படு | 47 |
| செயதுங்க | 20 | திதத்தத்தத் | 54 |
| செயலங்கை | 88 | தித்தவித்தார | 5 |
| செய்தவத் | 75 | தித்திக்குந் | 52 |
| செய்யசெந் | 43 | திமிரத்திமிர | 7 |
| செருக்கும் | 46 | தியங்கா | 63 |

| | பாட்டு எண் | | பாட்டு எண் |
|---|---|---|---|
| திரளக்க | 10 | தீராகமல | 83 |
| திரிகையிலாயிர | 34 | தீவரகந்தரி | 39 |
| திரிபுரத்தப்பு | 78 | தீவிலங்கங்கை | 53 |
| திருக்கை | 96 | தீவினையற்ற | 99 |
| திருத்துள | 35 | தீனந்தினத்து | 42 |
| திருவாவி | 1 | தெண்டன் | 41 |
| திலமுந்தயில் | 62 | தெய்வமணம் | 30 |
| திவாகர | 15 | தெளிதரு | 25 |
| திறம்பாடுவர் | 87 | தென்றலையம்பு | 82 |
| திறவாவனக | 95 | தென்னவனங் | 56 |
| தினகரரக்க | 23 | தேங்காவன | 13 |
| தினைவேத்தி | 18 | தேசம்புகல | 45 |
| தீட்டப்படா | 72 | தேடிக்கொடும் | 27 |
| தீதாவசவ | 31 | தேமொழி | 4 |
| தீதோமரணந் | 55 | தேரைவிடப் | 77 |
| தீத்தன்பரவை | 57 | வாரணத்தானை | காப்பு-1 |

# கந்தரந்தாதி

## காப்பு

வாரணத் தானை யயனைவிண் ணோரை மலர்க்கரத்து
வாரணத் தானை மகத்துவென் றோன்மைந் தனைத்துவச
வாரணத் தானைத் துணைநயந் தானை வயலருணை
வாரணத் தானைத் திறைகொண்ட யானையை வாழ்த்துவனே

## இதுவுமது

உண்ணா முலையுமை மைந்தா சரணம் பரருயிர்சேர்
உண்ணா முலையுமை மைந்தா சரண மருணைவெற்பாள்
உண்ணா முலையுமை மைந்தா சரணந் தனமுமொப்பில்
உண்ணா முலையுமை மைந்தா சரணஞ் சரணுனக்கே

## நூல்

திருவாவி னன்குடி பங்காள ரெண்முது சீருரைச
திருவாவி னன்குடி வானார் பரங்குன்று சீரலைவாய்
திருவாவி னன்குடி யேரகங் குன்றுதொ றாடல்சென்ற
திருவாவி னன்குடி கொண்டதண் கார்வரை செப்புமினே 1

செப்புங் கவசங் கரபா லகதெய்வ வாவியம்பு
செப்புங் கவசங் கரிமரு காவெனச் சின்னமுன்னே
செப்புங் கவசம் பெறுவார் கணுந்தெய்வ யானைதனச்
செப்புங் கவசம் புனைபுயன் பாதமென் சென்னியதே 2

சென்னிய மோகந் தவிராமு தோகண் டிகிரிவெண்ணெய்ச்
சென்னிய மோகம் படவூ தெனத்தொனி செய்தபஞ்ச
சென்னிய மோகந் தரம்புனத் தேன்புணர் தேவைத்தெய்வச்
சென்னிய மோகம் பணிபணி யேரகத் தேமொழிக்கே 3

தேமொழி யத்தம் பெறவோந் தனக்கன்று சேணுலகத்
தேமொழி யத்தம் சினங்காட் டவுணரைச் சேமகரத்
தேமொழி யத்தம் புயமவர் சூடிகை சிந்தவென்ற
தேமொழி யத்தம் பதினா லுலகுமந் தித்ததொன்றே 4

தித்தவித் தார மனித்தரைத் தேவர் வணங்க முன்போ
தித்தவித் தாரகை மைந்தர்செந் தூர்க்கந்தர் சிந்துரவா
தித்தவித் தார முடையா ரருள்வெள்ளந் தேக்கியன்பு
தித்தவித் தாரந் தனிவீ டுறத்துக்கச் செவ்வனலே 5

செவ்வந்தி நீலப் புயமுரு காபத்தர் சித்தமெய்யிற்
செவ்வந்தி நீலத்தை யுற்றருள் வாய்திங்கட் சேய்புனைந்த
செவ்வந்தி நீலத் தொருபாகர் போன்ற தினிச்சிந்தியார்
செவ்வந்தி நீலத்தி னீடுமுற் றாத திமிரமுமே 6

திமிரத் திமிரக் கதரங்க கோபசெவ் வேலகைவேல்
திமிரத் திமிரக் ககுலாந் தகவரைத் தேன்பெருகுந்
திமிரத் திமிரத் தனையாவி யாளுமென் சேவகனே
திமிரத் திமிரக் கனலாய சந்தன சீதளமே 7

சீதனங் கோடு புயங்கைகொண் டார்தந் திருமருக
சீதனங் கோடு முடியாளர் சேய்தனக் கேதுளதோ
சீதனங் கோடு னிதருமென் பார்தொழுந் தேவிபெறுஞ்
சீதனங் கோடு கொடிவேன் மயூரஞ் சிலையரசே 8

சிலைமத னம்படு மாறெழுஞ் சேய்மயி லுச்சிட்டவெச்
சிலைமத னம்படு சிந்துவை யிந்துவைச் செய்வதென்யான்
சிலைமத னம்படு காட்டுவர் கேளிருஞ் செங்கழுநீர்ச்
சிலைமத னம்படு தாமரை வாவி திரள்சங்கமே 9

திரளக் கரக்கரை வென்கண்ட வேலன் றிசைமுகன்மால்
திரளக் கரக்கரை யான்பாட நாடுதல் செய்யசங்க
திரளக் கரக்கரை காண்பான்கைந் நீத்திசை வார்பனிக்க
திரளக் கரக்கரை வானீட்டு மைந்தர்புந் திக்கொக்குமே 10

திக்கத்திக் கோடு படிபுடைச் சூதத் தெறிபடபத்
திக்கத்திக் கோடு கடடக் கடறடி சேப்படைச்சத்
திக்கத்திக் கோடு துறைத்திறத் தற்ற குறக்குறச்சத்
திக்கத்திக் கோடு பறித்துக்கொ டாதி சிறைபிறப்பே 11

சிறைவர வாமையி லேறிச்சிகரி தகரவந்து
சிறைவர வாமையில் கூப்பிடத் தானவர் சேனைகொண்ட
சிறைவர வாமையில் வாங்கிதன் றேங்கழல் யாங்கழலாச்
சிறைவர வாமையி னெஞ்சுட னேநின்று தேங்குவதே 12

தேங்கா வனமும் மதகரி வேந்துடன் சேர்ந்த விண்ணோர்
தேங்கா வனமுனை யவ்வேற் பணியெனுஞ் சேயிடமேல்
தேங்கா வனமுந் தளர்நடை யாயஞ்சல் செண்பகப்பூந்
தேங்கா வனமுங் கழுநீ ரிலஞ்சியுஞ் செந்திலுமே 13

செந்தி லகத்தலர் வாணுதல் வேடிச் சிமுகபங்க
செந்தி லகத்தலர் துண்டமென் னாநின்ற சேயசங்க
செந்தி லகத்தலர் ராசிதந் தானைச் சிறையிட்டவேற்
செந்தி லகத்தலர் தூற்றிடுங் கேடு திவாகருளே 14

திவாகர கன்ன கொடைப்பாரி யென்றுழ றீனவல்லீர்
திவாகர கன்ன புரக்குழை வல்லி செருக்குரவந்
திவாகர கன்ன சுகவா சகதிறல் வேல்கொடென்புந்
திவாகர கன்ன மறலி யிடாதுயிர்ச் சேவலுக்கே 15

சேவற் கொடியும் பனிசாந் தகனுந் திருக்கரத்துச்
சேவற் கொடியுங் கொடியகண் டாய்தினை சூழ்புனத்துச்
சேவற் கொடியுந் திவளத் தவளுந்தந் திக்களபச்
சேவற் கொடியு முடையாய் பிரியினுஞ் சேரினுமே 16

சேரிக் குவடு மொழிவிழி யாடனச் செவ்விகுறச்
சேரிக் குவடு விளைந்ததன் றேநன்று தெண்டிரைநீர்
சேரிக் குவடு கடைநாளி லுஞ்சிதை வற்றசெவ்வேள்
சேரிக் குவடு புடைசூழ் புனத்திற் றினைவிளைவே 17

தினைவேத் தியன்புசெய் வேந்தன் பதாம்புயத் திற்பத்திபுந்
தினைவேத் தியமுகந் தேற்றினர் மாற்றினர் பாற்றினந்தீத்
தினைவேத் தியர்நெறி செல்லாத விந்தியத் தித்தியினத்
தினைவேத் தியங்குயிர் கூற்றாரி லூசிடுஞ் சீயுடம்பே 18

சீயனம் போதி யெனவாய் புதைத்துச் செவித்தரத்தோல்
சீயனம் போதி யமலையிற் றாதை சிறுமுநிவன்
சீயனம் போதி கடைந்தான் மருகன்செப் பத்திகைத்தார்
சீயனம் போதி லரனா திருக்கென் செயக்கற்றதே 19

செயதுங்க பத்திரி போற்றும் பகீர திகரசெவ்வேற்
செயதுங்க பத்திரி சூடுங் குறத்தி திறத்ததண்டஞ்
செயதுங்க பத்திரி புத்திரி பாதத்தர் செல்வதென்பாற்
செயதுங்க பத்திரி யத்திரி யாதிரென் சிந்தையிலே 20

சிந்தா குலவ ரிசைப்பேரு மூருநஞ் சீருமென்றோர்
சிந்தா குலவ ரிடத்தணு காதரு டமதலை
சிந்தா குலவரி மாயூர வீர செகமளப்பச்
சிந்தா குலவரி மருக சூரனைச் செற்றவனே 21

செற்றை வரும்பழ னஞ்சோலை யிஞ்சி திகழ்வரைமேற்
செற்றை வரும்பழ நிக்கந்த தேற்றிடு! நூற்றுவரைச்
செற்றை வரும்பழ நாடாள நாடிகண் சேய்விடுத்த
செற்றை வரும்பழ மாங்கூடு வேமத் தினத்தில்வந்தே 22

தினகர ரக்கர தங்கெடுத் தார்குரு தேசிகர்செந்
தினகர ரக்கர மாறுடை யார்தெய்வ வாரணத்தந்
தினகர ரக்கர சத்தியின் றாகிலத் தேவர்நண்ப
தினகர ரக்கர தந்தீர்வ ரீர்வர் செகமெங்குமே 23

செகம்புர வார்கிளை யெல்லா மருண்டு திரண்டு கொண்ட
செகம்புர வாதிங்ஙன் செய்வதென் னோமயல் செய்யவன்பு
செகம்புர வாச மெனத்துயில் வார்செப்ப பங்கபங்க
செகம்புர வாமுரல் செந்தூர வென்னத் தெளிதருமே 24

தெளிதரு முத்தமிழ் வேதத்திற் றெய்வப் பலகையின்கீழ்
தெளிதரு முத்தமிழா நித்தர் சேவித்து நின்றதென்னாள்
தெளிதரு முத்தமிழ் தேய்நகை வாசகச் செல்விதினைத்
தெளிதரு முத்தமிழ் செவ்வே ளிருப்பச் செவிகுனித்தே 25

செவிக்குன்ற வாரண நல்கிசை பூட்டவன் சிந்தையம்பு
செவிக்குன்ற வாரண மஞ்சலென் றாண்டது நீண்டகன்மச்
செவிக்குன்ற வாரண வேலா யுதஞ்செற்ற துற்றனகட்
செவிக்குன்ற வாரண வள்ளிபொற் றாண்மற்றென் றேடுவதே 26

தேடிக் கொடும்படை கைக்கூற் றடாதுளஞ் சேவின்மைமீன்
தேடிக் கொடும்படை கோமான் சிறைபட வேறுளபுத்
தேடிக் கொடும்படை யாவெகு நாட்டன் சிறைகளையுந்
தேடிக் கொடும்படை மின்கேள்வ னற்றுணை சிக்கெனவே 27

சிக்குறத் தத்தை வழங்கா திழந்து தியங்குவர்தே
சிக்குறத் தத்தை வடிவே லேனார்சில ரன்பர்செந்தாள்
சிக்குறத் தத்தை கடிந்தேனல் காக்குஞ் சிறுமிகுறிஞ்
சிக்குறத் தத்தை யனகிலெப் போதுந் திகழ்புயனே 28

திகழு மலங்கற் கழல்பணி வார்சொற் படிசெய்யவோ
திகழு மலங்கற் பகவூர் செருத்தணி செப்பிவெண்பூ
திகழு மலங்கற் பருளுமென் னாவமண் சேனையுபா
திகழு மலங்கற் குரைத்தோ னலதில்லை தெய்வங்களே 29

தெய்வ மணம்புணர் தீகால் வெளிசெய்த தேவரைந்த
தெய்வ மணம்புண ராரிக்கு மருக செச்சையந்தார்
தெய்வ மணம்புண ருங்குழ லாளைத் தினைப்புனத்தே
தெய்வ மணம்புணர் கந்தனென் னீருங்க டீதறவே 30

தீதா வசவ னுபவிக்க மண்ணிலும் விண்ணிலுஞ்செந்
தீதா வசவ னியாயஞ்செய் வேதிய ரேதியங்காத்
தீதா வசவ னிமலர்செல் வாசாக் கிரவசத்த
தீதா வசவன் புறப்பா ரெனுமுத்தி சித்திக்கவே 31

சித்திக்கத் தத்துவ ருத்திர பாலக செச்சைகுறிஞ்
சித்திக்கத் தத்துவ ரத்தியின் மாவென்ற சேவகவிச்
சித்திக்கத் தத்துவர் வாய்மொழி மாதர்க் கெனுந்திணைவா
சித்திக்கத் தத்துவ ருத்தப் படாதுநற் சேதனமே 32

சேதனந் தந்துறை யென்றுமை செப்புங் குருந்துறைகாற்
சேதனந் தந்துறை யல்லிமன் வாவிச் செந்தூர்கருத
சேதனந் தந்துறை யென்றறி யார்திற நீங்கிநெஞ்சே
சேதனந் தந்துறை மற்றுமுற் றாடித் திரிகைவிட்டே 33

திரிகையி லாயிர வெல்லாழி மண்விண் டருசிரபாத்
திரிகையி லாயிர வாநந்த நாடகி சேரிமகோத்
திரிகையி லாயிர மிக்குமைந் தாசெந்தி லாயொருகால்
திரிகையி லாயிரக் கோடிசுற் றோடுந் திருத்துளமே 34

திருத்துள வாரிகல் போதுடன் சேண்மழை தூங்குஞ்சங்க
திருத்துள வாரிதி கண்டுயி லாசெயன் மாண்டசிந்தை
திருத்துள வாரன்னை செந்தூரையன் னள்செம் மேனியென்பு
திருத்துள வார்சடை யீசர்மைந் தாவினிச் செச்சைநல்கே 35

செச்சைய வாவி கலயில்வல்வாயிடைச் சேடனிற்கச்
செச்சைய வாவி பருகுஞ் சிகாவல செங்கைவெந்தீ
செச்சைய வாவி விடுகெனுஞ் செல்வநின் றாளணுகச்
செச்சைய வாவி னுயிர்வாழ வினியலஞ் சீர்ப்பினுமே 36

சீர்க்கை வனப்பு மலர்வேங்கை யானவன் செஞ்சிலையோர்
சீர்க்கை வனப்பு னிதத்தவ வேடன் றினைவளைக்குஞ்
சீர்க்கை வனப்பு னமதுருக் காட்டிய சேய்தமிழ்நூற்
சீர்க்கை வனப்பு னிமிர்சடை யோன்மகன் சிற்றடிக்கே 37

சிற்றம் பலத்தை யரன்புநெய் நூற்றிரி சிந்தையிடுஞ்
சிற்றம் பலத்தை வரஞான தீபமிட் டார்க் குப்பரி
சிற்றம் பலத்தை யருளுஞ்செந் தூரர் பகைக்குலமாஞ்
சிற்றம் பலத்தைப் பதவரந் தோளிலிந் தீவரமே 38

தீவர கந்தரி தாம்பகி ராருற வானசெம்பொன்
தீவர கந்தரி யாநொந்த போதினிற் செச்சையவிந்
தீவர கந்தரி சிந்துரை பாக சிவகரண
தீவர கந்த ரிபுதீ ருனதடி சேமநட்பே 39

சேமர விக்கம் படையாக வீசுப தேசமுன்னூற்
சேமர விக்கம் பலந்தரு வாய்செரு வாயவெஞ்சூர்ச்
சேமர விக்கந் திரித்தாய் வருத்திய வன்றிறென்றல்
சேமர விக்கம் புயவாளி விண்டிரை தெண்டிரையே 40

தெண்டன் புரந்தர வக்குன்றில் வாழ்கந்த சிந்துவிலுத்
தெண்டன் புரந்தர லோகஞ் செறாதுசெற் றோய்களைவாய்
தெண்டன் புரந்தர நற்கேள் சிறுவ ரழச்செய்தெம்மைத்
தெண்டன் புரந்தர வின்படி நூக்கிய தீநரகே 41

தீனந் தினத்து தரசசெல்வர் பாற்சென் றெனக்கென்பதோர்
தீனந் தினத்து முதரா னலஞ்சுடச் சேர்ந்துசுடுந்
தீனந் தினத்து னிகளைசெங் கோட்டினன் செந்திலந்நீர்
தீனந் தினத்து தவத்துப் பிரசதஞ் செய்யவற்றே 42

செய்யசெந் தாமரை யில்லாத மாதுடன் செந்தினை சூழ்
செய்யசெந் தாமரை மானார் சிலம்பிற் கலந்துறையுஞ்
செய்யசெந் தாமரை யென்னுங் குமார சிறுசதங்கைச்
செய்யசெந் தாமரை சேர்வதென் றோவினை சேய்தொலைத்தே 43

சேதாம் பலதுறை வேறும் பணிகங்கை செல்வநந்தன்
சேதாம் பலதுறை யாதசிற் றாயன் றிருமருக
சேதாம் பலதுறை செவ்வாய்க் குறத்தி திறத்தமுத்திச்
சேதாம் பலதுறை யீதென் றெனக்குப தேசநல்கே 44

தேசம் புகல வயிலே யெனச்சிறை புக்கொருகந்
தேசம் புகல வணவாரி செற்றவ னீசற்குப
தேசம் புகல திகவாச கன்சிறி தோர்கிலன்மாந்
தேசம் புகல கமுதவி மானைச் செருச் செய்வதே 45

செருக்கும் பராக வயிராவ தத்தெய்வ யானைமணஞ்
செருக்கும் பராக தனந்தோய் கடம்ப செகமதநூல்
செருக்கும் பராக மநிரு பனந்தந் தெளிவியம்பு
செருக்கும் பராகம் விடுங்கடை நாளுந் திடம்பெறவே 46

திடம்படு கத்துங் கெடீர்கன்ம லோகச் சிலுகுமச்சோ
திடம்படு கத்துந் திரித்தம்பு வாலி யுரத்தும்பத்துத்
திடம்படு கத்துந் தெறித்தான் மருக திருகுமும்ம
திடம்படு கத்துங் கநகங் குனித்தவன் சேயெனுமே 47

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்தசெந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்தவென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே 48

சேதக மொன்று மனாதியுந் தாதையுந் தேடரியார்
சேதக மொன்றுஞ் சதங்கையங் கிண்கிணி செச்சையந்தாள்
சேதக மொன்றும் வகைபணி யாயினித் தீயவினைச்
சேதக மொன்று மறியா துழலுயிர்ச் சித்திரமே 49

சித்திர மிக்க னவில்வாழ் வெனத்தெளி யுந்தவவா
சித்திர மிக்க னெறிக்கழிந் தேற்கினிச் செச்சைநல்வி
சித்திர மிக்க தனக்குறத் தோகை திறத்தமுத்தி
சித்திர மிக்க வருளாய் பிறவிச் சிகையறவே 50

சிகைத்தோகை மாமயில் வீரா சிலம்புஞ் சிலம்பம்புரா
சிகைத்தோகை மாமயில் வாங்கிப் பொருது திசைமுகன்வா
சிகைத்தோகை மாமயில் வானில்வைத் தோய்வெஞ் செருமகள்வா
சிகைத்தோகை மாமயில் செவ்விநற் கீரர்சொற் றித்தித்ததே 51

தித்திக்குந் தொந்திக்கு நித்தம் புரியுஞ் சிவன் செவிபத்
தித்திக்குந் தொந்திக் கறமொழி பாலக தேனலைத்துத்
தித்திக்குந் தொந்திக் கிளையாய் விளையுயிர்க் குஞ்சிதைதோல்
தித்திக்குந் தொந்திப் பனவேது செய்வினைத் தீவிலங்கே 52

தீவிலங் கங்கை தரித்தார் குமார திமிர முந்நீர்
தீவிலங் கங்கை வருமான் மருக தெரிவற்றவான்
தீவிலங் கங்கை வரவா விரைக்குத் திரிந்துழலுந்
தீவிலங் கங்கை யமன்றொட ராமற் றிதம்பெறவே 53

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே 54

தீதோ மரணந் தவிரும் பிறப்பறுந் தீயகற்புந்
தீதோ மரணம் பரமீது தானவர் சேனை முற்றுந்
தீதோ மரணந் தனபூசு ரர்திரண் டேத்தியமுத்
தீதோ மரண மலையாளி யென்றுறை தென்னுறவே 55

தென்ன வனங்கனஞ் சூழ்காத் திரிநக சூலகரத்
தென்ன வனங்கனந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்
தென்ன வனங்கனல் வீற்றாற் றிருத்திய தென்னவின்னந்
தென்ன வனங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே 56

தீத்தன் பரவை வெளிநீங்கிச் செய்தொழச் செல்பதவுத்
தீத்தன் பரவை முறையிட மாங்குறை தீங்குறவே
தீத்தன் பரவை தழைக்கவின் காவெனச் சென்னியின்மேல்
தீத்தன் பரவையில் வேலத்த னேகுரு சீலத்தனே 57

*சீலங் கனமுற்ற பங்கா கரசல தீரக்கறி*
*சீலங் கனமுற்ற முத்தூர்செந் தூர சிகண்டியஞ்சு*
*சீலங் கனமுற்ற வேதனை மேவித் தியங்கினஞ்சீ*
*சீலங் கனமுற்ற விப்பிறப் பூடினிச் சேர்ப்பதன்றே* 58

*சேர்ப்பது மாலய நீலோற் பலகிரித் தெய்வவள்ளி*
*சேர்ப்பது மாலய முற்றா ரெனப்பலர் செப்பவெப்புச்*
*சேர்ப்பது மாலய வத்தைமன் யாக்கை சிதைவதன்முன்*
*சேர்ப்பது மாலய வாசவன் செப்பிய செப்பதத்தே* 59

*செப்பத் தமதிலை மாற்றார் கொளுமுன்னங் செல்வர்க்கிடச்*
*செப்பத் தமதிலை யெங்ஙனுய் வார்தெய்வ வேழமுகன்*
*செப்பத் தமதிலை வாணுத னோக்கினர் சேணில்வெள்ளிச்*
*செப்பத் தமதிலை வென்றார் குமாரவத் திக்கரசே* 60

*திக்கர சத்தி தவன்சென்று முன்றி திகுமரர்வந்*
*திக்கர சத்தி யிடத்தோயென் செய்வ தெனத்தருநீ*
*திக்கர சத்தி விதிர்த்திலை யேலெவன் செய்குவரத்*
*திக்கர சத்தி யலைவாய் வளர்நித் திலக்கொழுந்தே* 61

*திலமுந் தயில முநிகர வெங்குந் திகழ்தருசெந்*
*திலமுந் தயில முருகா வெனாதத் திநகையினித்*
*திலமுந் தயிலமு தத்தா லுருகிய சித்தவென்னே*
*திலமுந் தயில கலவினை மேவித் தியங்குவதே* 62

*தியங்காப் பொறியுண் டெனுந்தனுத் தீதலு மேதியையூர்*
*தியங்காப் பொறியுண் டவமிலி யேயென்று செப்பலுஞ்சத்*
*தியங்காப் பொறியுண் டயன்கைப் படாது திரவெற்புநி*
*தியங்காப் பொறியுண்டை பண்டுயப் போர்செய்த சேவகனே* 63

*சேவக மன்ன மலர்க்கோமுன் னீசொலத் தெய்வவள்ளி*
*சேவக மன்ன வதனாம் புயகிரி செற்றமுழுச்*
*சேவக மன்ன திருவாவி னன்குடிச் செல்வகல்விச்*
*சேவக மன்ன முநிக்கெங்ங னாணித் திகைப்புற்றதே* 64

*திகைப்படங் கப்புயந்த தந்தரு ளானென் படிங்கணிய*
*திகைப்படங் கத்தமை யார்செந்தி லாரென்ப டென்னனுய*
*திகைப்படங் கப்புகல் சேயென்பள் கன்னிகண் ணீர்தரவி*
*திகைப்படங் கத்தமை யாதெமை யாட்கொளுஞ் சீகரமே* 65

*சீகர சிந்துர வுத்தவெஞ் சூர செயபுயவ*
*சீகர சிந்துர வல்லிசிங் கார சிவசுதசு*
*சீகர சிந்துர கந்தர வாகன் சிறைவிடுஞ்சு*
*சீகர சிந்துர மால்வினைக் குன்றைச் சிகண்டிகொண்டே* 66

சிகண்டிதத் தத்த மரவாரி விட்டத் திதிபுத்ரரா
சிகண்டிதத் தத்த நகபூ தரதெய்வ வள்ளிக்கொடிச்
சிகண்டிதத் தத்த மலர்மேற் குவித்திடை செப்புருவஞ்
சிகண்டிதத் தத்த கறபோ பலமென்னுஞ் சேகரனே 67

சேகர வாரண வேல்வீர வேடச் சிறுமிபத
சேகர வாரண மேவும் புயாசல தீவினையின்
சேகர வாரண வெற்பாள நாளுந் த்ரியம்பகனார்
சேகர வாரண நின்கையில் வாரணஞ் சீவனொன்றே 68

சீவன சத்துரு கன்பாற் பிறப்பறத் தேவருய்யச்
சீவன சத்துரு மிக்குமெய் யோன்கையிற் சேர்த்தசெவ்வேள்
சீவன சத்துருச் செய்யாண் மருகவெ னாதிடையே
சீவன சத்துரு வெய்தியெய் தாப்பழி சிந்திப்பதே 69

சிந்துர வித்தக வாரும் புகர்முகத் தெய்வவெள்ளைச்
சிந்துர வித்தக வல்லிசிங் காரசெந் தூரகுன்றஞ்
சிந்துர வித்தக முத்திக்கு மாய்நின்ற செல்வதுஞ்சா
சிந்துர வித்தக னம்போலு மிங்கிளந் திங்களுமே 70

திங்களு மாசுண மும்புனை வார்செல்வ னென்னையிரு
திங்களு மாசுண மாக்கும் பதாம்புயன் செந்திலன்னாள்
திங்களு மாசுண மன்போல் விழியுஞ் செழுங்கரும்புந்
திங்களு மாசுண நன்றான மாற்றமுந் தீட்டினன்றே 71

தீட்டப் படாவினி யுன்னாலென் சென்னி கறைப்பிறப்பில்
தீட்டப் படாவி யவரல்லன் யான்றிக்கு நான்மருப்புத்
தீட்டப் படாவி தமுகா சலன்சிறை விட்டவன்றாள்
தீட்டப் படாவி வனையே நினைவன் றிசாமுகனே 72

திசாமுக வேதனை யன்பாற் கரன்றிங் கடங்களவ
திசாமுக வேதனை யீறிலு மீறிலர் சீறுமம்போ
திசாமுக வேதனை வென்கண்ட வேலன் றினைப்புனத்தந்
திசாமுக வேதனை நண்ணுதண் கார்வரை சேர்பவரே 73

சேரப் பொருப்பட வித்தே னிறைவன் றிரைசிறையைச்
சேரப் பொருப்பட வல்லவன் சூரைச் சிகரியுடன்
சேரப் பொருப்பட வென்றண்ட ரேத்திய சேவகன்வான்
சேரப் பொருப்பட வேணியிற் சேர்த்தவன் செய்தவமே 74

செய்தவத் தாலஞ்சு சீரெழுத் தோதிலந் தீதலருஞ்
செய்தவத் தாலஞ்சு கம்பெறச் சேயுரைக் கேற்றுருப்போய்ச்
செய்தவத் தாலஞ்சு வைக்கனி யீன்றதென் னேம்வினையே
செய்தவத் தாலஞ்சு கின்றன மும்மலச் செம்மல்கொண்டே 75

செம்மலை வண்டு கடரங்க மாவென்ற திண்படைவேற்
செம்மலை வண்டு வசவார ணத்தனைச் செப்பவுன்னிச்
செம்மலை வண்டு தவந்தமிழ்ப் பாணதெண் டீங்கையில்வாய்
செம்மலை வண்டு விருப்புறு மோவிது தேர்ந்துரையே 76

தேரை விடப்பணி யேறேறி முப்புரஞ் செற்றபிரான்
தேரை விடப்பணி சூராரி யென்க தெரிவையர்பால்
தேரை விடப்பணி வாய்ப்படு மாறு செறிந்தலகைத்
தேரை விடப்பணித் தென்றோடி யென்றுந் திரிபவரே 77

திரிபுரத் தப்புப் புவிதரத் தோன்றி சிலைபிடிப்பத்
திரிபுரத் தப்புத் தலைப்பட நாண்டொடுஞ் சேவகன்கோத்
திரிபுரத் தப்புத் திரமான் மருக திருக்கையம்போ
திரிபுரத் தப்புத் துறையா யுதவெனச் செப்புநெஞ்சே 78

செப்பா ரமுதலை மன்னோ திகனங் குரும்பைமுலை
செப்பா ரமுதலை கண்கா னகைமுருந் தீரிருகண்
செப்பா ரமுதலை வாவியிற் சென்ற பிரான்மருகன்
செப்பா ரமுதலை வேர்களை வான்வரைச் சீரினுக்கே 79

சீராம ராம சிவசங்க ராநுந் திருமுடிக்குச்
சீராம ராம துகரத் துழாயென்பர் தெண்டிரைமேற்
சீராம ராம நிறந்திறக் கத்தொட்ட சேய்கழற்குச்
சீராம ராம னிமையோர் மகுடச் சிகாவிம்பமே 80

சிகாவல வன்பரி தப்பாடு செய்யுஞ்செவ் வேலவிலஞ்
சிகாவல வன்பரி வூரார் மதனித் திலஞ்சலரா
சிகாவல வன்பரி யங்கங் குழல்பெற்ற தேமொழிவஞ்
சிகாவல வன்பரி பானல மன்றிலுந் தென்றலுமே 81

தென்றலை யம்பு புனைவார் குமார திமிரமுந்நீர்த்
தென்றலை யம்புய மின்கோ மருக செழுமறைதேர்
தென்றலை யம்பு சகபூ தரவெரி சிந்திமன்றல்
தென்றலை யம்பு படுநெறி போயுயிர் தீர்க்கின்றதே 82

தீரா கமல சலிகித போக மெனத்தெளிந்துந்
தீரா கமல மெனக்கரு தாததென் சேயவநூல்
தீரா கமல குகரம் பொறுப்ப னெனத்திருக்கண்
தீரா கமல மரவே கருகச் சிவந்தவனே 83

சிவசிவ சங்கர வேலா யுததினை வஞ்சிகுறிஞ்
சிவசிவ சங்கர வாமயில் வீர செகந்திருக்கண்
சிவசிவ சங்கர மாவை யெனுந்திற லோய் பொறைவா
சிவசிவ சங்கர மான்பட்ட வாவொளி சேர்ந்தபின்னே 84

சேந்த மராத்துடர் தானவர் சேனையைத் தெண்டிரைக்கண்
சேந்த மராத்துடன் கொன்றசெவ் வேல திருமுடிமேற்
சேந்த மராத்துட ரச்சூடி மைந்த திளைத்திளைத்தேன்
சேந்த மராத்துட ரின்னாரி யென்னுமிச் சேறுபுக்கே 85

சேறலைத் தாறலைக் கப்பா லெழுந்து செழுங்கமுகிற்
சேறலைத் தாறலைக் குஞ்செந்தி லாய்சிந்தை தீநெறியிற்
சேறலைத் தாறலைத் தீர்க்குங் குமார திரியவினைச்
சேறலைத் தாறலைக் கத்தகு மோமெய்த் திறங்கண்டுமே 86

திறம்பா டுவர்தண் புனத்தெய்வ மேயென்பர் சேதத்துமாந்
திறம்பா டுவர்முது நீரெனக் காய்பவர் செந்தினைமேல்
திறம்பா டுவரிதழ் கண்டுரு காநிற்பர் செப்புறச்செந்
திறம்பா டுவரி லிவர்வல் லவர்நஞ் செயல்கொள்ளவே 87

செயலங்கை வாளை யிறைகோயி லைச்சிவ னாரமுதைச்
செயலங்கை வாளை முனிகொண்டல் வாளியைத் தேவர்பிரான்
செயலங்கை வாளை முனைவேலை யன்னவிச் சேயுறையுஞ்
செயலங்கை வாளை யுகள்செந்தில் வாழ்பவள் சேல்விழியே 88

சேலையி லாருந் தவன்சூல மேறச் சினத்தவன்கண்
சேலையி லாருந் திவனோற் பவையர சிந்திரியச்
சேலையி லாரும் பராபரி புக்குறச் சிக்கெனுமிச்
சேலையி லாருந் திறையிட் டனர்தங்கள் சித்தங்களே 89

சித்தத் தரங்கத்தர் சித்தியெய் தத்தரி கின்றதென்னர்ச்
சித்தத் தரங்கத்தர் சந்ததி யேசெந்தி லாய்சலரா
சித்தத் தரங்கத்த ரக்கரைச் செற்றகந் தாதிங்களிஞ்
சித்தத் தரங்கத்தர் சேயா ரணத்தந் திகிரியையே 90

திகிரி வலம்புரி மாற்கரி யார்க்குப தேசஞ்சொன்ன
திகிரி வலம்புரி செய்யா ரிலஞ்சிசெந் தூர்கனதந்
திகிரி வலம்புரி வேறும் படைத்தருள் சேய்தணியில்
திகிரி வலம்புரி சூடிய வாநன்று சேடியின்றே 91

சேடி வணங்கு வளைத்தோ ளெனப்புணர் சேயவட
சேடி வணங்கு திருத்தணி காவல நின்செருக்காற்
சேடி வணங்கு கொடியிடை யாரையென் செப்புமுலைச்
சேடி வணங்கு தலைக்களி நீந்தது செல்லநில்லே 92

செல்லலை யம்பொழில் சூழ்செந்தி லானறி யானிறைகைச்
செல்லலை யம்பொழி லெங்கணு மேற்ப வெனத்தெறித்த
செல்லலை யம்பொழி லங்கைக் கருடிரு மானிறம்போற்
செல்லலை யம்பொழி லாகவ மாதுயிர் சேதிப்பதே 93

சேதிக் கனைத்து களதாக்கு நோக்கினன் செல்வசெந்திற்
சேதிக் கனைத்து நிலைபெறச் சூரங்கஞ் சீரங்கமால்
சேதிக் கனைத்து வரிதோ யயில்கொடெற் சேர்க்கவந்தாற்
சேதிக் கனைத்து வருமா மறலி திறலினையே 94

திறவா வனக புரிவாச னீக்கச் சிகரிநெஞ்சந்
திறவா வனச முனியைவென் றோய்தென் றிசைத்திருச்செந்
திறவா வனமயி லோயந்த காலமென் சிந்தைவைக்கத்
திறவா வனநின் றிருவான தண்டைத் திருவடியே 95

திருக்கையம் போதிக ளோகஞ்ச மோநஞ்ச மோதிருமால்
திருக்கையம் போசெய்ய வேலோ விலோசனந் தென்னனங்கத்
திருக்கையம் போருகக் கைந்நீற்றின் மாற்றித்தென் னூல்சிவபத்
திருக்கையம் போக வுரைத்தோன் சிலம்பிற் சிறுமிதற்கே 96

சிறுமிக் குமர நிகர்வீர் பகிரச் சிதையுயிர்த்துச்
சிறுமிக் குமர சரணமென் னீருய்விர் செந்தினைமேற்
சிறுமிக் குமர புரைத்துநின் றோன்சிலை வேட்டுவனெச்
சிறுமிக் குமர வணிமுடி யான்மகன் சீறடிக்கே 97

சீரங்க ராக மறமோது திகிரி செங்கைகொண்ட
சீரங்க ராக மருகந்த தேசிக செந்தினைமேற்
சீரங்க ராக தனகிரி தோய்கந்த செந்தமிழ்நூற்
சீரங்க ராக விநோதவென் பார்க்கில்லை தீவினையே 98

தீவினை யற்ற சினந்தீ ரகத்துண்மெய்த் தீபநந்தந்
தீவினை யற்ற வநந்தா தெடுத்தனஞ் செந்தினைமேல்
தீவினை யற்ற புனமான் கொழுநன் செழுங்கனகத்
தீவினை யற்ற வடியார்க் கருள்பெறுஞ் செல்வனுக்கே 99

செல்வந் திகழு மலநெஞ்ச மேயவன் றெய்வமின்னூர்
செல்வந் திகழு நமதின்மை தீர்க்கும்வெங் கூற்றுவற்குச்
செல்வந் திகழுந் திருக்கையில் வேறினை காத்தசெல்வி
செல்வந் திகழு மணவாள னல்குந் திருவடியே 100

✿ ✿ ✿ ✿ ✿